Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 259
















# இனவாத அரசியல் அபாயகரமானது



(கிளிநொச்சி)

இனவாத அரசியல் மிகவும் அபாயகரமானது. இந்த நாட்டிற்கு குறுகிய அரசியல் போக்குத் தேவையில்லை. கடந்த 30 வருடங்களாக யுத்தம் நடைபெற்றது. ஆனால் அபிவிருத்தி நான்கு ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. இந்த வித்தியாசத்தை இப்பிரதேசத்திலுள்ள மக்களாகிய நீங்கள் பார்க்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏ-9 வீதி மற்றும் மக்கள் வங்கி கிளையைத் திறந்து வைத்த பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு

## கிளிநொச்சியில் ஜனாதிபதி

தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 30 ஆண்டுகளில் அழிக்கப்பட்டவற்றை நாம் மீளப் பெறறுக் கொண்டு வருகிறோம்.

அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். யுத்தம் 30 ஆண்டுகள் நடைபெற்றது, ஆனால் அபிவிருத்தி நான்கு ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. வித்தியாசத்தை நீங்களே பாருங்கள். உங்கள் பிராந்தியம் துரிதமாக அபிவிருத்தியடைகிறது. அது மேலும் அபிவிருத்தியடைய வேண்டும்.

திட்டமிட்டபடி வடமாகாண

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வை ஏற்படுத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு

அரசியல் தீர்வை உருவாக்குவதற்காக அடுத்த வாரம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. அவையின் தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவினால் இந்த தெரிவுக்குழு அமைப்பதற்கான பிரேரணை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது குறித்து கலந்துரையாடுவதற்கான கட்சித் தலைவர்களின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளுக்கமைய சபாநாயகரினால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்படுவர்.

சகல மாகாணசபைகளும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மாகாணசபைகளுக்கு கைய

19 ஆம் பக்கம் பார்க்க

### படை அதிகாரிகள் இடமாற்றம்; இந்தியக் கோரிக்கை நிராகரிப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அழுத்தங்களை அடுத்து, வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் ஒரு ஆண்டுகாலக் கற்கையை மேற்கொள்ளும் இலங்கைப் படை அதிகாரிகள் இருவரையும், அங்கிருந்து இடம்மாற்றுவது குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை நடத்தி வருவதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடப்பட்டு வருகிறது. இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று இந்தியப்

19 ஆம் பக்கம் பார்க்க

## அபிவிருத்தி செய்யப்பட்ட ஏ-9 வீதி ஜனாதிபதியால் கிளிநொச்சியில் திறப்பு

(கிளிநொச்சி)

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கண்டி பிரதான வீதி நேற்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி முன்னதாக இரணைமடு விமான நிலையத்தினைத் திறந்து வைத்தார். பின்னர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்குச் சென்ற அவர் அங்கு மணாவர்களுக்கான




பால் வழங்கும் திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததுடன், மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

இதன் பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஏ-9 வீதியினைப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியர் பாலகிருஷ்ணன் கொழும்பில் காலமானார்



யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப் பீடாதிபதியும், சிரேஷ்ட பொருளியற் துறை பேராசிரியருமான நாகலிங்கம் பாலகிருஷ்ணன் நேற்று கொழும்பில் காலமானார்.

சில காலமாக சுகவீனமுற்றிருந்த நிலையில் அன்னார் தனது 77 ஆவது வயதில் வைத்தியசாலையில் காலமானதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணன் சுமார் 40 வருட காலமாக தமிழ், பொருளியல் பாடத்துறையில் சிறந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் செயற்பாடுகளை ஜேர்மன் கண்காணிக்க வேண்டும்

### அமைச்சர் பீரிஸ் கோரிக்கை

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்குமாறு ஜேர்மனியிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் ஜேர்மனியில் இயங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனிக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் பீரிஸ் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் குய்டோ வெஸ்டர் வெலியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். உண்மையைக் கண்

19 ஆம் பக்கம் பார்க்க

## வரலாற்றில் முதற்தடவையாக வடமராட்சி கிழக்கிற்கு மின் விநியோகம்

### ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ்

(மருதங்கேணி)

இலங்கை வரலாற்றில் மின்சாரத்தையே கண்டிராத வடமராட்சி கிழக்கின் மூன்று கிராமங்களுக்கான மின் விநியோகத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் ஆரம்பித்து வைத்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் உடுத்துறை, ஆழியவளை, வத்திராயன் ஆகிய மூன்று கிராமங்களுக்கான மின் விநியோகமே நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 90 குடும்பங்களுக்கான மின் இணைப்புகளும் நேற்றைய தினம் வழங்கப்பட்டன.

மின்விநியோகத்தை வழங்கும் நிகழ்வு மருதங்கேணி உதவி அரச அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் உடுத்துறை வேம்படி விடிவெள்ளி

19 ஆம் பக்கம் பார்க்க



# சூழலுக்கு தீங்கினை ஏற்படுத்தாத உணவுற்பத்தியை மேம்படுத்தத் திட்டம்

## விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத உணவுற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற மரநடுகைத்திட்ட ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "இவ்வாண்டு "யோசி உண் - சேமி" என்ற கருப்பொள் இன்று உலகம் பூராகவும் உச்சரிக்கப்படுகின்றது. உலகத்தில் ஏழில் ஒரு பங்கு மக்கள் சாப்பாடு ஏதுமின்றி படுக்கைக்குச் செல்வதாகவும் 5 வயதிற்குட்பட்ட 20 ஆயிரம் பேர் பட்டினி காரணமாக ஒவ்வொருநாளும் இறப்பதாக உலக உணவு விவசாய ஸ்தாபன அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே உணவுப் பாதுகாப்பினை மேற்கொள்வதற்கு பல்வேறு வழிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். எமது மாகாணத்தில் மரக்கறியின் தேவை 87 ஆயிரம் மெற்றிக்தொன்னாகவும் பழத்தின் தேவை 56 ஆயிரம் மெற்றித்தொன்னாகவும் காணப்படுகின்றது.

இருந்தாலும் 112 ஆயிரம் மெற்றித்தொன் மரக்கறியும், 120 ஆயிரம் மெற்றித்தொன் பழவகையும் கிடைக்கின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களில் ஏற்படும் இழப்புக்களைத் தடுப்பதற்காக விவாசாயிகளுக்கு பிளாஸ்ரிக் கூடைகள் வழங்கப்படுகிறது.

அத்துடன் மரக்கறிகளால் ஏற்படுகின்ற செவ்ீனத் தினை குறைப்பதற்காகவும் போசனை மட்டத்தினை மேம்படுத்துவதற்காகவும் திவிநெகும திட்டத்தின் கீழ் 88 ஆயிரம் பயனாளிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டு உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்




### இலவசம்

குறிப்புக்கள் பொருத்தம் பார்த்தல் (R/191)

அழையுங்கள் 077 223 7053 ஒரு தொலைபேசி இலக்கத்திலிருந்து ஒரு குறிப்பு மட்டும் வேறு குறிப்புக்களுடன் பொருத்தம் பார்த்துச் செல்லப்படும்.

கீழ்வரும் அட்டவனையை அவதானித்து கிரக நிலைகளைத் தெரிவிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| A | B | C | D |
| L | | | E |
| K | | | F |
| J | I | H | G |

குறிப்பு எஸ்.எம்.எஸ் இல் அனுப்புவதாயின் கீழ்வரும் உதாரணத்துக்கு அமைவாக அனுப்பவும்.

| | | | |
|---|---|---|---|
| A 3 | B சந்திரன் ராகு | C | D |
| L சனி | | | E குரு செவ் |
| K லக் | | | F புத சுக்கி சூரியன் |
| J 12 | I 11 | H கேது | G 9 |

K Lakkanam B Santhiran Raku E Kuru Sevvai Suriyan Puthan Sukkiran H Kethu Nadsaththiram Puradam Bakam Nanku (4)



**சிறு விளம்பரம்**

**வீடு விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: மு.சீவறட்ணம் (சிவராசா) சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R.189)


# கொககுவில சநதியில வீடடு யனனல மீது தாககுதல

கொக்குவில் சந்திப்பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் யன்னலை இனம் தெரியாத சிலர் தாக்கி உடைத்துச் சேதமாக்கியிருப்பதாக யாழ்.பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த வீட்டு யன்னல் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலினால் குறித்த வீட்டுக்காரருக்கு 15 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தல் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர் (பா)

# பனையிலிருந்து விழுந்தவர் கை முறிந்த நிலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மல்லாவிப்பகுதியில் பனை மரத்திலிருந்து தவறிவீழ்ந்து ஒரு கை முறிந்து படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாவியைச் சேர்ந்த சிறிகாந் (வயது - 31) என்ற இளைஞரே இவ்வாறு பனை மரத்தில் ஓலை வெட்டுவதற்காக ஏறிய வேளை அதில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சையின் நிமித்தம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

# சீருடை வழங்கல்

(நெல்லியடி)

நெல்லியடி ஆட்டோ சங்க உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இச் சீருடைகளை வழங்கவுள்ளார்.

அத்துடன், ஆட்டோக்களுக்கான தூரமானியும் (மீற்றர்) வழங்கப்படவுள்ளது. எனவே நெல்லியடி ஆட்டோ சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஆட்டோ சங்கத்தலைவர் கிருஷ்ணராசா அறிவித்துள்ளார். (17)

# துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொள்ள அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் 15.01.2013 ஆம் திகதி யாழ்.பொலிஸாரால் உரிமைகோரப்படாத இரண்டு துவிச்சக்கர வண்டிகள் இல 55930282, 55931409) பாரப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த துவிச்சக்கர வண்டிகளை உரிமை கோருபவர்கள் நீதிமன்றத்திற்கு அலுவலக நேரங்களில் சமூகமளித்து அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறும், ஆறு மாதகாலத்தினுள் குறித்த சான்றுப்பொருட்களை ஏற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அரசுடமையாக்கப்படும் என நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# நாரந்தனை சூரியவத்தைக்கு விரைவில் மின் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை சூரியவத்தை பிரதேசத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மின்சாரம் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடுகளை மேற்கெண்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயக்காந்தன் தெரிவித்துள்ளார்.

நாரந்தனை சூரியவத்தை பிரதேசத்தில் உள்ள பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தற்பொழுது மின்சார வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், வெகு விரைவில் இப்பிரதேச மக்களும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வர் எனவும், மின்சாரம் இல்லாத ஏனைய பிரதேசங்களுக்கு விரைவில் மின்சாரம் பெற்றுத்தரப்படும் எனவும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயக்காந்தன் தெரிவித்துள்ளார். (65)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 161 | திகதி 2013.06.14 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்: 24 25 51 53 Y (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 12,154,280/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 03 | 150,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 197 | 197,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 361 | 361,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8588 | 515,280/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4553 | 182,120/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 112431 | 2,248,620/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16314 | 326,280/- |
| நான்கு இலக்கங்களை மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 12,154,280/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,980,300/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,374,540/-

2013.06.18ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும் (C/2827)

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே. 011 2333546/47 (C/2842) web : www.dlb.lk


# ஸ்ரீமதி சுயந்தி கணேசமூர்த்தி

குவலயத்தில் 26 - 01 - 1961



சிவமயத்தில் 17 - 05 - 2013

**இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா அன்பின் தவப்பொருளே! தாரமே! தாயே! தயாநிதியே! நமைப் பெரிதும் தவிக்கவிட்டுச் சென்றனையே! சிவனடியில் சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்! ஓம் சாந்தி**

பேரன்புடையீர்,

17.05.2013 இல் நித்திய ஜோதியாகி எங்கள் குடும்பச்சுடர் திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் பிரிவால் நாம் பெருந்துயர் கொண்டிருந்தவேளை பல்வேறு வழிகளிலும் (நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தந்தி மூலமும், பத்திரிகை கண்ணீர் அஞ்சலி செய்தி யூடாகவும் துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் ஊடாகவும், மலர் வளையங்கள் வைத்தும், e.mail ஊடாகவும்) எமக்கு ஆறுதல் தெரிவித்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்து உணர்வுக்கு என்றும் நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். பெருந திரளாக நீவிர் கூடி இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதல் அளித்தமையை எண்ணுகையில் எங்ஙனம் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியும், அந்தியேட்டி அழைப்பும் தெரிவிப்பதெனப் புரியவில்லை. காலக் கோலத்தில் செய்வதறியாது நிற்பதனால் உங்கள் ஒவ்வொருவரையும் அன்பும், நன்றியும் நிறைந்த உள்ளக் கரங்களால் உங்கள் கரங்கள் உரிமை பூண்டு அழைக்கின்றோம். பெருமனம் கொண்டு இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி வருகைதர வேண்டும் என்று இறைஞ்சுகிறோம்.

எங்கள் குடும்பத்து ஒளி விளக்கு திருமதி சுயந்தி கணேசமூர்த்தி அவர்களின் வீட்டுக் கிருத்தியம், சபிண்டீகரணக் கிரியைகள் 16.06.2013 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 க்கு எங்கள் இல்லத திலும், இவற்றைத் தொடர்ந்து இல.1229, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் பூநாறி மரத்தடியில் உள்ள 'செல்வ மஹால்' மண்டபத்தில் மு.ப. 11.00 மணிக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடை பெறும். இவற்றில் தாங்களும் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டும் என்று நன்றியுணர்வுடனும், அன்புரிமையுடனும் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இல.60. சேர்.பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0776215500

இங்ஙனம் :
திரு.த.கணேசமூர்த்தி (கணவர்)
மற்றும் பிள்ளைகள், குடும்பத்தினர்.

(C/2836)

# வீதி நடைமுறைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதிகள் புனரமைக்கப்பட்டு வீதி நடைமுறைகளுக்கு அமைவாக மஞ்சள் கடவை, பஸ் தரிப்பு நிலையக் குறியீடு, பாதசாரிகள் கடவை என்பன ஒழுங்கான முறையில் போடப்பட்டுள்ள போதிலும் அவற்றை வாகன சாரதிகளோ, பொதுமக்களோ சரியான முறையில் பின்பற்றுவதில்லை என பலதரப்பாலும் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 பாதை முதல் முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளக வீதிகள பெரும்பாலானவை காப்பெற வீதியாக புனரமைக்கப்பட்டு வீதியில் குறியீடுகள் போடப்பட்டுள்ளன.


எனினும், பொதுமக்கள் பஸ் தரிப்பு நிலையத்துக்கான குறியீடு போடப்பட்ட இடத்தில் நிற்காது பொது இடத்தில் நின்று பேருந்து பயணத்தை மேற்கொள்வதாகவும், வாகன சாரதிகளும் மஞ்சள் கடவையை பார்க்காது வாகனத்தைச் செலுத்திச் செல்வதாகவும், இதனால் ஏனைய மக்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதைவிட பாடசாலை மாணவர்களும், வீதி நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதி நடைமுறைகள் குறித்து உரிய அதிகாரிகளால் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் சமூக மட்டத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும், இதன்மூலம் விபத்துக்கள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்விடயத்தில் போக்குவரத்துப் பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## வெற்றி வடிவேலனே!



வங்க கடல் அருகினிலே -வேலவா!
வன்னி மரத்தடியிலிருந்து
வந்தாரை வாழவைத்து - காக்கும்
வள்ளி மணவாளனே
வேண்டும் வரம் தந்திடவே
வேட்டையாடி வென்றிடவே
வேலம்புடனே வாருமையா
வெற்றி வடிவேலனே துணை!

பொலிகண்டி கல்யாண வேலவன் ஆலய மஹோற்சவத்தில் 8 ஆம் திருவிழா இன்றாகும்.

பொலிகையூர்
கே.கே.விசிந்தன்

# மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியீடு

(நேற்றையதொடர்ச்சி...)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ். தமிழ்ச் சங்கமும், யாழ். மறைமாவட்டமும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு,

கட்டுரை - மத்தியபிரிவு

செ.கு.தேனுஜா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), க.எப்சிகா (யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தி), அ.சஹீதா (புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி).

மேற்பிரிவு

க.சுபர்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), ம.எஜ்ரர் கிஸ்டா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சா.தனுசா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

அதிமேற்பிரிவு

ஸ்ரீ.பதுசனன் (யாழ். இந்துக் கல்லூரி), பூ.லக்சியா (புனித தெரே சாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), அ.புஸ்ப அன்ரனிற்றா (நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி).

கவிதை மேற்பிரிவு

சி.சதீஸ்கா (யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), க.தர்சிகா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்), ந.அபிராமி (யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை).

அதிமேற்பிரிவு

ஜீ.சஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), கோ.சங்கீதா (யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), அவேனிஸ்ராலினி (நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி), ட.சுகன்ஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சூ.கீர்த்தனா (புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி). (தொடரும்)

## தீர்த்தக்கேணி நிர்மாணம்

(வரணி)

வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலயத்தில் மஹோற்சவ காலத்தில் அம்பாள் தீர்த்தமாடுவதற்கு ஏதுவாக தீர்த்தக்கேணி புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இதற்கான முன் ஏற்பாடுகளை ஆலய நிர்வாக சபையினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தீர்த்தக்கேணி அமைப்பதற்காக பல அடியார்கள் பண உதவி வழங்கியுள்ளதுடன் பலரால் பண உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் ஆலய நிர்வாக செயலாளர் பொ.தியாகராசா தெரிவித்தார். (150)

## குரக்கன் பயிர்ச்செய்கை விவசாயிகள் ஆர்வம்

(அச்சுவேலி)

அச்சுவேலி கதிரிப்பாய், பத்தமேனி போன்ற பகுதிகளில் குரக்கன் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவதனைக் காண முடிகின்றது.

நல்ல இன குரக்கன் விதைகளை நாற்றுமேடைகளில் விதைத்து 15 நாட்களின் பின்பே அவற்றைத் தமது விவசாய நிலங்களில் நடுகை செய்கின்றனர்.

கடந்த காலங்களிலும் இவ்வாறு குரக்கன் பயிரினை மேற்கொண்டு பயன் பெற்றனர். எனினும், கடந்த காலங்களில் வெங்காயப் பயிர் அழிந்தமையினாலேயே இவர்கள் தற்போது மாற்றுப் பயிராகிய குரக்கன் பயிர்ச் செய்கையிலும் அதிக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (85)

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு மாகாண மட்ட சித்திரப் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரப்போட்டி மாகாண மட்டத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வடமாகாண பாடசாலைகளிலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

உட்படுத்தல் கல்வியின் கீழ் சாதாரண வகுப்பறைகளில் கற்றுவரும் விசேட தேவையுடைய மாணவரும் விசேட கல்வி அலகுகளை கற்றுவரும் மாணவர்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவாகவும் விசேட பாடசாலைகளில் கற்றுவரும் மாணவர்கள் வேறாகவும் போட்டிகளில் பங்குபற்றும் வகையில் தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படும்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் 18x14 அளவுடைய சித்திரத்தாளில் விரும்பிய வர்ணத்தைப் பயன்படுத்தி சித்திரம் வரையலாம்.

வரையப்படும் சித்திரம் போட்டியாளரது என்பதையும், பெயர், கல்வி கற்கும் தரம் பாடசாலை என்பவை சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதையும் அதிபர் உறுதிப்படுத்தவேண்டும்.

இப்போட்டியில் பிரிவு 1 (தரம் 1-3) இற்கு மனதைக் கவரும் மாலைப்பொழுது, நான் கற்கும் பாடசாலை, எனது குடும்பம்.

பிரிவு -2 (தரம் 4,5) இற்கு எனது பூந்தோட்டம், நான் இரசித்த திருவிழா, எனக்கு பிடித்த சிறுவர் பூங்கா, பிரிவு 3 (தரம் 6, 9) இற்கு அரிவு வெட்டும் காட்சி, நான் சென்ற சுற்றுலாப் பயணம், எனது நல்ல நண்பர்கள்.

பிரிவு - 4 (தரம் 10,11) இற்கு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, தடைக்கற்கள் வெற்றிப்படிகளாகட்டும், உழைப்பால் உயர்வோம்.

பிரிவு -5 (தரம் 12-13)

இற்கு இயற்கை அனர்த்தங்கள், புத்தகம் ஒன்றுக்கான அட்டைப்படம், அழகிய பாடசாலைச் சூழல், முயற்சி திருவினையாக்கும். போன்ற தலைபுக்களில் ஏதாவது ஒன்றை ஒவ்வொரு பிரிவும் தெரிவு செய்து சித்திரம் வரையலாம்.

போட்டியாளர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்று வருவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி கருத்தரங்கு கடந்த 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தொடங்கி நாளை திங்கட்கிழமை வரை ஐந்து நாட்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு அச்சடித்த கற்றல் கையேடுகள், கடந்தகால வினாத்தாள்கள் என்பன வழங்கப்படுகின்றன. கருத்தரங்கில் தவறவிட்ட மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## சித்திரத்தேர்

(வரணி)

வடமராட்சி வியாபாரி மூலை இன்பர்சிட்டி கற்பூர விநாயகப் பெருமானுக்கு தற்போது புதிய சித்திரத்தேர் அமைப்பு வேலைகள் துரிதமாக இடம்பெறுகிறது.

இவ்வாலயத்தில் இதுவரை காலமும் கட்டுத்தேர் மூலம் விநாயகப் பெருமான் வீதி உலா வந்த நிலையில் நிரந்தர சித்திரத்தேர் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் இனிவரும் மஹோற்சவ காலத்தில் இத்தேரிலே விநாயகப் பெருமான் எழுந்தருள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (150)



சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்வுகளின் சில காட்சிகள்...

காலத்திற்கு மனிதன் கட்டுப்பட்டே ஆகவேண்டும்.நேர ஒழுங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்யுங்கள். - அமுதமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## உண்டி சுருங்குதல் யாவர்க்கும் அழகு!

மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். குடி, சிகரெட் என்று தீய பழக்கங்கள் மட்டும் அவனை அடிமைப் படுத்துவதில்லை. நல்ல பழக்கங்கள், நல்லதோ தீயதோ ஏதென்று தெரியாத பழக்கங்கள் போன்றவற்றையும் கூட தொடர்ந்து செய்து வந்துவிட்டால் அதை நிறுத்த முடியாமல் செய்துகொண்டிருப்பது மனிதர் வழக்கம்.

நம் சிந்தனையும் அப்படித்தான். பழகிய சிந்தனைகள் நம்பிக்கைகளிலிருந்தும் மீள முடியாமல் பெரும்பாலும் அதற்குள் வட்டமடித்தே வாழ்ந்து முடித்துவிடுகிறோம். நாம் சிந்திக்கும் தடத்தை மாற்ற முடிவதில்லை அல்லது மாற்ற விரும்புவதில்லை. பழகிய பாதையிலேயே போய்க்கொண்டிருப்போம். புதிய பாதைகளில் திரும்பி நடப்பவர்களைப் பார்த்தாலே நமக்கு ஒவ்வாமைதான் வருகிறது.

பழகியதிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. நம் உணவுப்பழக்கம் கூட அப்படித்தான். காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவதென்று பழக்கப்பட்டிருக்கிறோம். பழக்கப்பட்டதாலேயே அந்தந்த நேரத்திற்குப் பசியெடுப்பதும் பழக்கமாகிவிட்டது. இப்போது இதற்கும் ஆய்வு நடத்தி விட்டார்கள். இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு கட்டாயமும் மனிதருக்கில்லை என்கிறது அந்த ஆராய்ச்சி.

"உயிர் வாழ வேண்டுமானால் தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்த அவசியமும் கிடையாது; மூன்று வேளை சாப்பிட்டு பழகிவிட்டோம், அவ்வளவுதான்" என்று இதுபற்றி ஆய்வு செய்த [illegible] விஞ்ஞானி கூறுகிறார். பிறகு எத்தனை வேளை சாப்[illegible]ண்டும்? எத்தனை முறை என்ற கணக்கெல்[illegible] இல்லை. எவ்வ[illegible]வு குறைவாக சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்கிறார் மைக்கல் மோஸ்லி என்ற இந்த விஞ்ஞானி. அவர் சொல்கிற காரணங்கள் மறுக்கக் கூடியதாக இல்லை.

உடல் உறுப்புகள் செயற்பட சக்தி தேவை. அதை வழங்குவது நாம் சாப்பிடும் உணவு. அதில் மாப்பொருள், புரதம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. உணவு சமிபாடடையும் போது இந்த சத்துக்கள் உடலின் இயக்கத்துக்கு எரிசக்தியாக மாறுகிறது. அதிகமான சத்துக்கள் கிடைக்கும்போது உடலில் பல பிரச்சினைகள் உண்டாகிறது என்கிறார் மோஸ்லி. இந்த சத்துக்கள் கலோரி அளவால் அளவிடப்படுகிறது. ஒரு கிராம் புரதம் அல்லது மாப்பொருளில் 4 கலோரி என்றால் கொழுப்பில் 9 கலோரி.

நிறைய சாப்பிடும்போது கலோரிகள் அதிகமாகும். உடலின் தேவைக்கு மேலதிகமான கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி தீங்கு விளைவிக்கும். கலோரிகள் குறைந்த உணவு வகைகளை சாப்பிடும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் மற்றவர்களைவிட அதிக காலம் உயிர் வாழ்வதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர். உடல் உழைப்பு, உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கு தேவைக்கு மீறிய உணவால் வரக்கூடிய ஆபத்து அதிகம். பசி எடுப்பதாக நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிடுபவர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்கிறார் மோஸ்லி.

முடியாதவர்கள் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நல்லது என்பது அவருடைய யோசனை. உடல் பருமனைக் குறைப்பதற்கு, மூன்று வேளைக்குப் பதிலாக ஆறு வேளை அதே உணவைச் சாப்பிடலாம் என டாக்டர்கள் பரிந்துரை செய்து வருகையில், கலோரிகளில் கவனம் செலுத்தினால் மூன்றுவேளைகூட தேவையில்லை என்ற கருத்து புதிய விவாதத்துக்கு வித்திட்டுள்ளது.

- ஆசிரியர்

# கூட்டமைப்பின் டில்லி யாத்திரை
# சம்பந்தன் தலைமையில் நேற்று

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினரின் புதுடில்லிப் பயணம் நேற்று இரவு ஆரம்ப மாகியது. இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆறு பேர் அடங்கிய குழு புதுடில்லி சென்றுள்ளது. இந்தக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், பொன்.செல்வராசா ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இவர்கள் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நிதி அமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

குறிப்பாக, 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பலவீனப்படுத்தும் அரசின் முயற்சிகள் குறித்தே இந்தச் சந்திப்புகளில் முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, புதுடில்லியின் முக்கிய அதிகாரிகள், மற்றும் இராஜதந்திரிகளுடனும், 13 ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தும் அரசின் முயற்சிகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலத்தை எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையில், இந்த அவசரச் சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆனந்தசங்கரியின் அமுத விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் அகவை 80 நிறைவு அமுத விழா இன்று காலை கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்டச் செயலகத்திலும், பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பல்வேறு அரசியல் பிரமுகர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர். (05,112)

## வீதியோரத்தில் விபசாரம் தெற்கில் நால்வர் கைது

(கொழும்பு)

கொழும்பு, மவுன்ட்லாவன்யா ஹோட்டலுக்கு அருகிலுள்ள பிரதான வீதியில் விபசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 3 பெண்கள் உட்பட நபர் ஒருவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மவுன்ட் லாவன்யா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது காரைப் பயன்படுத்தி பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் உட்பட 3 பெண்கள் கொழும்பு, மவுன்ட் லாவன்யா ஹோட்டலுக்கு அருகிலுள்ள பிரதான வீதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போது மேற்படி நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

கண்டி, மாதம்பே மற்றும் பலப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## கோத்தாபய மீது தாக்குதல் முயற்சி; ஆறு பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

குண்டொன்றை வெடிக்க வைத்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைக் கொலை செய்ய முயன்ற சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் 6 பேரையும் கொழும்பு சிரேஷ்ட நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவின் உரிய பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. மேலும் சந்தேக நபர்களை நீதவான் ஜூன் 21 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## முற்கொடுப்பனவு அட்டை இ.போ.ச. பேருந்துகளிலும்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணிக்க வெகுவிரைவில் முற்கொடுப்பனவு முறைமை அட்டை அறிமுகப்படுத்தவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இம்முறையானது பயணிகளுக்கு வெகு இலகுவான விடயமாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். போக்குவரத்துக்குத் தேவையான பணத்தை மட்டும் இவ்வட்டையினூடாகச் செலுத்தமுடியும் என்பதால் சில பஸ் நடத்துநர்கள் செய்யும் ஏமாற்று வேலைகளிலிருந்து பயணிகள் தப்ப முடியுமென அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்து பஸ் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ளும் வைபவத்தில் அமைச்சர் இதனைக்கூறியுள்ளார்

## கம்பி எண்ணுகிறார் மாகாணசபை உறுப்பினர்

### பாடசாலையில் அடாவடித்தனம்

வடமேல் மாகாண சபை உறுப்பினரான ஆனந்த சரத்குமார, நவகத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமேல் மாகாணசபை உறுப்பினரான அனந்த சரத் குமார, பாடசாலை ஆசிரியை ஒருவரை நேற்று முழங்காலில் நிறுத்தி வைத்துத் தண்டனை வழங்கியுள்ளார்.

குறித்த ஆசிரியை, பாடசாலை மாணவி ஒருவருக்குச் சீருடை தொடர்பாக எச்சரித்துள்ளார். இதுகுறித்து குறித்த மாணவி மாகாண சபை உறுப்பினரான தனது தந்தை அனந்த சரத் குமாரவிடம் கூறியுள்ளார்.

இனையடுத்து பாடசாலைக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர், குறித்த ஆசிரியையை பாடசாலைக்குள்ளேயே முழங்காலில் நிறுத்தி தண்டனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து ஆசிரியை நவகத்தேகம பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கூட்டமைப்புக்குள் நிலவுவது முரண்பாடா? குழப்பமா?

சங்கர சிவன்

அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று ஒரு நேரத்தில் கூறினார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இன்னொரு நேரத்தில் கூறினார்கள். நான்கு வருடங்களாகச் சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்த்தபோதிலும் அதனால் எந்தநன்மையும் மக்களுக்குக் கிடைக்கவில்லை. தாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு எது என்று சொல்லாமல் நான்கு வருடங்களாக இவர்கள் நடத்திய நழுவல் அரசியல் தமிழ் மக்களை எப்படியான நெருக்கடிக்குள் கொண்டுபோய் விட்டிருக்கின்றது என்பதை இத்தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னணித் தலைவர்கள் அடங்கிய ஒரு குழு இன்று இந்தியாவுக்குப் பயணமாகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்யும் வகையில் அதற்குச் சில திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்வது பற்றி இந்தியத் தலைவர்களுடன் பேசப்போகின்றார்களாம்.

கூட்டமைப்புத் தலைவர்களின் இந்திய விஜயம் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்திய விஜயம் பற்றிக் கூட்டமைப்புத் தலைமை முடிவு செய்த அதே காலத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தை முற்று முழுதாக நிராகரித்தார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன். கடந்த புதன்கிழமை யாழ். ஊடக மையத்தில் உரையாற்றிய சிறீதரன் பதின்மூன்றாவது திருத்தத்தை இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகவோ அல்லது இடைக்காலத் தீர்வாகவோ அல்லது அதற்கான தொடக்கப் புள்ளியாகவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதவில்லை என்று கூறினார்.

கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாடு என்ன என்ற கேள்வி இங்கு எழுகின்றது. சிறீதரன் கூறுவது போலப் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிராகரிப்பதா? அப்படியானால் இந்தியாவுக்கு மீண்டும் காவடி தூக்க வேண்டிய அவசியம் இல்லையே. அல்லது இந்தியப் பயணத்தின் நோக்கமான பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதா? இதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடென்றால் சிறீதரன் கூறியது அவரது சொந்த கருத்தா?

சிறீதரன் தனது சொந்தக் கருத்தை வெளியிட்டதாக வைத்துக்கொண்டால், கூட்டமைப்புக்குள் நிலவுவது முரண்பாடா அல்லது குழப்பமா என்ற கேள்வி எழுகின்றது. அதாவது இதுதான் தீர்வு என்று தீர்மானிக்க முடியாத குழப்பமா? அல்லது வெவ்வேறு சக்திகள் மாறுபட்ட தீர்வுகள்ள வலியுறுத்தும் முரண்பாடா?

எவ்வாறாயினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பு நேர்மையாக நடக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் அரசியல் போராட்டத்துக்குத் தலைமை தாங்குபவர்கள் தங்கள் இலக்கு என்ன என்பதையும் அதை அடையும் வழி எது என்பதையும் மக்களுக்குத் தெளிவாகக் கூற வேண்டும். தாங்கள் எதற்காகப் போராடுகின்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. இவ்விடயத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். மாகாண சபையை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து படிப்படியாக முழுமையான அதிகாரப் பகிர்வை அடைவதே தனது கட்சியின் கொள்கை என்பதையும் இணக்க அரசியல் மூலம் அதைச் சாதிக்கலாம் என்பதையும் அவர் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

மாகாண சபையை வலுக்குறைப்புச் செய்யும் முயற்சியைத் தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்தியாவுக்குச் செல்கின்ற கூட்டமைப்புத் தலைவர்களுள்ளும் மாகாண சபையை நிராகரித்துக் கருத்துத் தெரிவித்தவர்கள் இருக்கின்றார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மாகாண சபையை நிராகரிக்கும் செயற்பாடு. இன்னொரு சந்தர்ப்பத்தில் மாகாண சபையை ஏற்கும் செயற்பாடு. இப்படியான இரட்டை நிலைப்பாடு அரசியல் தலைமைக்குக் கூடாது.

புலிகளின் தோல்விக்குப் பிந்திய நான்கு வருடங்களில் இலக்கு இல்லாத போராட்டத்தையே கூட்டமைப்பு நடத்தியது. தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவில்லை. அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு எது என்று கூடச் சொல்லவில்லை. அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று ஒரு நேரத்தில் கூறினார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இன்னொரு நேரத்தில் கூறினார்கள். நான்கு வருடங்களாகச் சர்வதேச சமூகம் பற்றிய நம்பிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்த்த போதிலும் அதனால் எந்த நன்மையும் மக்களுக்குக் கிடைக்கவில்லை. தாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு எது என்று சொல்லாமல் நான்கு வருடங்களாக இவர்கள் நடத்திய நழுவல் அரசியல் தமிழ் மக்களை எப்படியான நெருக்கடிக்குள் கொண்டுபோய் விட்டிருக்கின்றது என்பதை இத்தலைவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**இன்றைய நெருக்கடி நிலையில் மாகாண சபையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கூட்டமைப்புத் தலைவர்களிடம் ஏற்பட்டிருப்பது மாகாண சபையின் முக்கியத்துவத்துக்கு ஒரு சான்று. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல, மீண்டும் யதார்த்தத்தை மறந்து சர்வதேச சமூகம் என்று பழைய பல்லவியைப் பாடுவார்களேயானால் தமிழ் மக்கள் இன்னும் மோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துவிடும்.**

மாகாண சபைக்கு அச்சுறுத்தலான நிலை உருவாகியதற்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் பிரதான பொறுப்பாளிகள். இவர்கள் சர்வதேச சமூகத்துடன் மினைக்கெட்ட நேரத்தில், நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துத் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளின் ஆதரவை அதற்குப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருந்தால் இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும். மாகாண சபையைப் பலவீனப்படுத்தும் முயற்சிக்கு எதிராக உள்ளூர் சக்திகள் தான் அரங்குக்கு வந்திருக்கின்றனவேயொழிய சர்வதேச சமூகம் உதவிக்கு வரவில்லை என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் கவனத்தில் கொள்வது நல்லது.

இன்றைய நெருக்கடி நிலையில் மாகாண சபையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் கூட்டமைப்புத் தலைவர்களிடம் ஏற்பட்டிருப்பது மாகாண சபையின் முக்கியத்துவத்துக்கு ஒரு சான்று. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல, மீண்டும் யதார்த்தத்தை மறந்து சர்வதேச சமூகம் என்று பழைய பல்லவியைப் பாடுவார்களேயானால் தமிழ் மக்கள் இன்னும் மோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துவிடும்.

இந்தியத் தலைவர்களைக் கூட்டமைப்பினர் சந்திக்கும்போது, நாங்கள் சொன்னபடி நடந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காதே என்று அவர்கள் ஒருவேளை இவர்களுக்குச் சொல்லலாம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றி உங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுங்கள் என்று சென்றதடவை இந்தியத் தலைவர்கள் இவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். இந்தியாவிலிருந்து திரும்பியதும், ஏற்கனவே, வழங்கப்பட்ட உரிமைகள் பற்றித் தெரிவுக் குழுவில் கருத்துப் பரிமாறல் இடம்பெறாது என்ற உறுதிமொழியை அரசாங்கத்திடமிருந்து கோரவுள்ளோம் என்று சுமந்திரன் ஊடகங்களுக்குக் கூறினார். கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்குபற்ற விரும்புகின்றது என்பதும் மாகாண சபையை ஏற்றுக்கொள்கின்றது என்பதும் இக்கூற்றின் பொதிந்துள்ள அர்த்தங்கள்.

ஆனால், சில தினங்களிலேயே கூட்டமைப்பு அதன் நிலைப்பாட்டை மாற்றியது. தெரிவுக் குழுவையும் மாகாண சபையையும் நிராகரித்தது. புலம் பெயர் அமைப்புகளின் அறிவுறுத்தலுக்கு அமையவே கூட்டமைப்பு இவற்றை நிராகரித்தது. சுயமான கொள்கையோடு செயற்படாமல் வெளிச் சக்திகளின் விருப்பு வெறுப்புக்கு ஏற்பச் செயற்பட முற்பட்டதாலேயே கூட்டமைப்பு இன்று இக்கட்டான நிலைக்கு முகங்கொடுக்கின்றது.

இப்போது இந்தியாவுக்குச் செல்லும் கூட்டமைப்புத் தலைவர்கள் இந்தியாவிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றார்கள். இலங்கையில் தனக்குள்ள சந்தை வாய்ப்பை இழக்காத நிலையிலேயே இந்தியா எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும். இந்தியாவின் செயற்பாடு எவ்வாறாக இருப்பினும் உள்ளூர் தயார்த்தத்துக்கு ஏற்ற வகையில் செயற்படுவதே புத்திசாலித்தனமானது.


இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை நண்பர்கள் யார் நண்பனாக வேஷம் போடுபவர்கள் யார் என்பதை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. எடுத்ததற்கெல்லாம் இந்தியாவையோ வேறு நாடுகளையோ திரும்பிப் பார்க்காமல் யதார்த்தத்துக்கு ஏற்ற விதத்தில் செயற்பட வேண்டியதன் மூக்கியத்துவத்தைக் கூட்டமைப்பு இப்போதாவது விளங்கிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தீர்வுக்கான கொள்கைத் திட்டம் அத்தியாவசியமானது.

ஆரம்பித்த இடத்துக்கு மீண்டும் வருவோம். பதின்மூன்றாவது திருத்தம் பற்றிச் சிறீதரன் தெரிவித்த கருத்து கூட்டமைப்புக்குள் முரண்பாடா? அல்லது குழப்பமா? என்ற கேள்வியை எழுப்புவதை மேலே பார்த்தோம். இந்த விடயத்தில் உடன்பாடு இல்லாமல் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவதாகக் கூறுவதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு. ஒன்றில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக மாகாண சபையை ஏற்க வேண்டும் அல்லது தீர்வுக்கான கொள்கைத் திட்டத்தை முன்வைத்து அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். வேறுபட்ட கொள்கைகளின் கூட்டுச் சாம்பாராகத் தொடர்ந்தும் இருப்பதால் தமிழ் மக்களுக்கு மென்மேலும் துன்பமேயொழிய எந்தவொரு நன்மையும் இல்லை.

# “13”ஐ கட்டுப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடம் எப்போதும் உண்டு

## எவரும் பீதியடையத்தேவையில்லை


(கொழும்பு)



அரசியல் அமைப்பின் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் குறித்து எவரும் அநாவசியமாக பீதியடையத்தேவையில்லை என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழு அதிகாரங்களும் தற்போதைய மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 13ஆவது திருத்தச்சட்டத்தை ஓர் பலவீனமான சட்டமாகவே கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டினாலும் காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் வழங்கப்படக் கூடிய சாத்தியம் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைத்து கொள்கை விவகாரங்களிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான பின்னணியில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சில தரப்பினர் தேவையற்ற பீதியை கிளப்பி வருவதாகத் தெரிவித்துள்ளார். தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இராணுவ கேணல் பலி புத்தளம் வீதியில் விபரீதம்




அனுராதபுரம் புத்தளம் வீதியில் தப்போவ பகுதியில் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் கேணல் ஒருவரும் கோப்ரல் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் மேஜர ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இராணுவத்தினர் பயணம் செய்தவாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரம் ஒன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# செப்ரெம்பரில் மாகாண தேர்தலா? கால அவகாசம் போதாது

## கைவிரிக்கும் நிலையில் தேர்தல் திணைக்களம்

(கொழும்பு)



தேர்தல் நடத்துவதாக இருந்தால் தேர்தல திணைக்களம் தயாராகுவதற்கு போதுமான கால அவகாசம் தேவை எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேர்தல் ஒன்றுக்கு தயாராகுவதற்கு 10 முதல் 12 கிழமைகள் வரை தேவைப்படும் என தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் விண்ணப்பப்படிவம், பெயர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் பிரசார நடவடிக்கை எதிர்புக்களை பதிவுசெய்தல் போன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான கால அவகாசம் அறிவிக்கப்படவேண்டும் என அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். இதேவேளை, வடக்கு, வடமேற்கு மற்றும் மத்திய மாகாண சபைகளில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடத்துவதற்கு இலங்கை சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதென அக்கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்ரி பாலசிறிசேன தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான விசேட சட்டமூலம் மற்றும் புதிய சட்ட திட்டங்களுக்கமைவாக தேர்தல் நடத்துவதாக இருந்தால் வடக்கில் செப்ரெம்பர் மாதம் தேர்தலை நடத்துவதை உறுதி செய்ய முடியாதென தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# காப்புறுதி இல்லாமல் கடலில் இறங்க முடியாது

## மீனவர்களுக்கு புதிய கட்டுப்பாடு

தென்பகுதி மற்றும் தென் மேற்குக் கரையோரங்களில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலை, கடற்காற்று காரணமாக 48 மீனவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் காப்புறுதி செய்யாமல் மீனவர்கள் கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் இது கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, சீரற்ற கால நிலையின்போது காணாமற் போயிருப்பவர்களில் 17 பேரைக கண்டு பிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.



இந்தப் பின்னணியில் வட பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கணிசமான எண்ணிக்கையில் மீனவர்கள் காப்புறுதி செய்திருப்பதாகவும், இது தென்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதாகவும் மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் பெனடிக்ற் சகாயநாதன் மிராண்டா கூறுகின்றார். அண்மையில் வீசிய கடும் காற்று மற்றும் சீரற்ற கடல் நிலை காரணமாக பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் உயிரிழந்திருப்பதையடுத்தே, மீனவரகள் கட்டாயம் காப்புறுதி செய்திருக்க வேண்டும் என்று, அரசாங்கம் அறிவித்திருப்பதாகவும் மிராண்டா தெரிவித்தார்.

காப்புறுதி நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கடற்றொழில் திணைக்களம் இந்த காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. வருடாந்தம் 750 ரூபா மற்றும் 1500 ரூபா என இரண்டு வகையாகப் பணம் செலுத்த வேண்டிய வகையில் வைத்திய தேவைக்கான கொடுப்பனவு, உயிரிழப்புக்கான கொடுபனவு என்ற வகையில் இந்தக் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது எனவும் மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் மிராண்டா கூறினார்.

இருந்த போதிலும் யுத்த மோதல்கள் தீவிரமாக இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழ்வாதார முயற்சிகள் இன்னும் சீராக இடம்பெறாத காரணத்தினால், வறுமை காரணமாக மீனவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே காப்புறுதி செய்திருகின்றார்கள்.

வறுமை காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மீனவர்கள் தமது பகுதியில் காப்புறுதி செய்து கொள்ள முடியாதிருப்பதாக முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளரான சிவராசா கிருபாகரன் கூறுகின்றார்.

# சர்வதேச பொலிஸாருக்கு தண்ணிகாட்டும் கில்லாடிகள்

## புலிகளின் பாணியில் மோசடி

பயங்கரவாதச் செயற்பாடுகள், மற்றும் நிதி மோசடி, போதைப் பொருள் வர்த்தகம், கடத்தல், நம்பிக்கையை சீர்குலைத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 87 இலங்கையர்களை சர்வதேச காவற்துறையினரால் இதுவரை கைதுசெய்ய முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகள் அடங்குகின்றனர். சர்வதேச காவற துறையினரின் பிடியில் சிக்காதிருக்கும் நபர்களில் இலங்கை தனியார் வங்கி ஒன்றின் முன்னாள் தலைவரும், சட்டத்தரணி ஒருவரும் அடங்குவதாக கூறப்படுகிறது. அத்துடன் பயங்கரவாதச்செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட பல விடுதலைப்புலி உறுப்பினர்களும் இந்த பட்டியலில் உள்ளனர். இவர்களை தவிர பெறுமதி சேர் வரி ஏய்ப்புடன் தொடர்புடைய பலர் இந்த பட்டியலில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

# படகு அகதிகளுக்கு பிரிட்டிஷ் கப்பல் உதவியது




பிரிட்டன் கப்பல் ஒன்றின் மூலம் இலங்கையர்கள் அவுஸ்ரேலியாவில் தஞ்சமடைந்துள்ளனர். இலங்கைத் தமிழர்கள் என சந்தேகிக்கப்படும் 78 பேர் இவ்வாறு அவுஸ்ரேலிய கொகோஸ் தீவுகளை சென்றடைந்துள்ளனர். படகு மூலம் சென்றவர்கள், படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக பிரிட்டன் கப்பலின் உதவியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். பிரிட்டன் வர்த்தகக் கப்பல் ஒன்றே இவ்வாறு இலங்கை அகதிக் கோரிக்கையாளர்களுக்கு உதவியுள்ளது.

# மேற்குலகில் வாழும் இலங்கையர் இரட்டைக்குடியுரிமை பெறுவதில் ஆர்வம்

## குறுக்கே நிற்கிறது சட்டமாஅதிபர் திணைக்களம்

இரட்டைக்குடியுரிமை சட்டத்தை அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலனந்த பெரேரா தெரிவித்துள்ளார். சட்டமா அதிபர் திணைகக்ளத்தின் கால தாமதமே, இரட்டைக் குடியுரிமை சட்டத்தை அமுல்படுத்த முடியாமைக்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மா அதிபர் திணைக்களம் குறித்த உத்தேச சட்டம் பற்றிய பரிந்துரைகளை நேர காலத்திற்கு வழங்காமல், தேவையின்றி தாமதப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். இரட்டைக் குடியுரிமை தொடர்பான உத்தேச சட்ட மூலம் சில மாதங்களுக்கு முன்னதாகவே தயாரிக்கப்பட்டு, சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இரட்டைக் குடியுரிமை சட்டத்தை கூடிய விரைவில் அமுல்படுத்தவே தாம் விரும்புவதாக தெரிவித்துள்ளார். கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இருந்து நள்ளிரவு வேளைகளில் கூட தொலைபேசி அழைப்புக்களை எடுத்து சிலர் இரட்டைக் குடியுரிமை பற்றிக்கேள்வி எழுப்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்கம் தொடர்பாக கிளிநொச்சியில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

ஜனாதிபதியின் தேசிய நல்லிணக்கத்திற்கான ஆலோசகர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க இன நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலை கிளிநொச்சி பிரெண்ட்ஸ் கோட்டலில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடாத்தவுள்ளார்.

இதில் கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமூக சேவைகள் அதிகாரி, சிறுவர் நன்நடத்தை அதிகாரி, முன்பிள்ளைப்பராய அபிவிருத்தி உதவியாளர், உளவளத்துணை உதவியாளர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி, மகளீர் அபிவிருத்தி அதிகாரி, கிராம அபிவிருத்தி அதிகாரி, அனைத்து கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொதுமக்கள் பிரதிநிதிகளும் கலநது கொள்ள உள்ளனர். இன நல்லிணக்கம் தொடர்பான கேள்விகளை கேட்டு அதற்கான பதிலைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் 3 மாதத திற்கொரு முறை இத்தகைய கலந்துரையாடலை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (90)

## முரசின் இன்றைய பலன்



(16.06.2013 – ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 2 ஆம் திகதி.
நட்சத்திரம் பூரம் முற்பகல் 9.58 வரை. பின் உத்தரம் ஸப்தமி திதி
காலை 6.46 வரை. பின் சித்தாமிர்தம் இராகுகாலம் 4.23 – 05.53 வரை.
சுபநேரம் 8.53 – 10.23 வரை.

ஜோதிர் வித்யாரத்னா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கிரகபாவம் விவாகத்தடையை ஏற்படுத்தல், கணக்கில் வரவு வைக்க கொண்டு சென்ற பணம் மாயமாதல், மனை, பூமி, பிணக்குத் தீர்க்க காவல்துறை செல்ல வாய்ப்பு, சத்திரசிகிச்சைக்கு சந்தர்ப்பம், கருத்து மோதலால் கைகலப்பு, பழுதடைந்த உணவினால் சச்சரவு, காலாவதியான பொருட்களால் தண்டம் |
| ரிஷபம் | திருமணப்பேச்சு வெற்றி தரும், காதல் உறவு மலர வாய்ப்பு, புதிய பதவி ஏற்க சந்தர்ப்பம். விளையாட்டில் சாதனை, பிள்ளையின் நோய் பற்றிய கலக்கம், பிரிந்தவர் ஒன்று சேர்தல், வழிதடுமாற்றம், பகையாளி மீண்டும் உறவுக்கு வருதல், மயிர்க்கொட்டியினால் தொல்லை, மதம் மாற உத்தேசித்தல், கற்பனையில் சிறகடித்தல். |
| மிதுனம் | வீடு மாற்றம், பதவி உயர்வு கிட்டும், ஒய்வூதியம் பெறும் கடிதம் வரலாம். கடன் கொடுக்க வாய்ப்பு, மத்திய கிழக்கு செல்ல வாய்ப்பு, சகுனப் பிழைகண்டு கலக்கமடைதல், திருடர்கள் பற்றிய பயம் அதிகமாக இருக்கும். முழங்கால்களின் வலியினால் அவதிப்படல், விசா கிடைக்க வாய்ப்பு. |
| கடகம் | போலி முகவரால் ஏமாற்றம், அடகுப் பொருட்களை மீட்க கடன் பெறுதல், திருமணம் சம்பந்தமான புலன் விசாரணை, புகழுக்கு பங்கம், விசாரணைகளின் முடிவு பாதகம், நம்ப நடந்ததால் பழி சேரல், உடையது விளம்பி சஞ்சலப்படல், வீதி விபத்துக்கு வாய்ப்பு, கைவிடப்பட்ட உறவு வீடு தேடி வரும். |
| சிம்மம் | மனதில் துயர வெள்ளம், மனதில் சந்தேகம் தோன்றி மனமகிழ்ச்சி குன்றும், உடையவன் இல்லா விட்டால் ஒரு முழம் கட்டை, வெளியூர் பயணத்திற்கான ஏற்பாடு, கடன் பெற்றவர் உங்களை நாடி வருவார், தாயாரை வைத்தியசாலை கொண்டு செல்ல நேரிடல், சுவீப் அதிஷ்டம். |
| கன்னி | துணையின்றிச் சென்று நகை, பணக்கேடு, விசர் நாய்க்கடி, வெளிநாட்டினின்றும் உறவுகள் வருகை, தொழிலுக்காக வெளியூர் பயணம், வாகனம், கையடக்கத் தொலைபேசி, ஆவணங்கள் பிறர் கைமாறாமல் இருப்பது நல்லது, கவனக்குறைவினால் பிழைகள் ஏற்பட வாய்ப்பு, புதிய கற்கை நெறி தொடர விரும்புதல் |
| துலாம் | அதிகாரிகள், முதலாளி உறவில் முன்னேற்றம். குடும்ப சுகம் பாதிக்கப்படாமல் பார்ப்பது நல்லது, கடன்காரரை தேடி அலைய வேண்டிய நிலை, வீட்டுத்திட்டம் காலை வாரிவிடுதல், விவாகப் பேச்சு ஆரம்பம், சுபசெய்தி ஒன்று கிட்டுதல், விருந்துபசாரம், வாகனயோக முண்டு. |
| விருச்சிகம் | புதிய தொழில் தேட முயற்சி, பசப்பு வார்த்தையினால் பணம் பறிபோகாமல் எச்சரிக்கை வேண்டும். விலாசத்திற்குரிய நபரைத்தேடி அலைய வாய்ப்பு, பிரிவுத்துயர் மனதை வாட்டல், வெளியூர் பயண அழைப்பிதழ் கிடைக்க வாய்ப்பு, இழந்த பொருட்கள் மீண்டும் கைக்கு எட்டும். |
| தனுசு | சீதனம் காரணமாக திருமணப் பேச்சு இடை நிறுத்தல், இலஞ்சம் பெற்று பதவிக்குக்கேடு. கடன் பெற்றவர் தலைமறைவு, வியாபாரம் கைவிடல், வந்த நல்ல வாய்ப்பு கைவிட்டுச் செல்லல், புதிய வியாபார முயற்சி கைகூடும், வைத்தியத்திற்காக வெளிநாடு செல்ல உத்தேசித்தல், சுவீப் அதிர்ஷ்டம். |
| மகரம் | வங்கித் தொடர்பினால் அதிக நன்மை, பற்றுச்சீட்டுப் புத்தகம் தவறும் அபாயம். இதய நோய் குறித்து எச்சரிக்கை வேண்டும். மனைவிக்கு திடீர் சுகயீனம் ஏற்பட வாய்ப்பு, கடிதம் விலாசம் மாறிச் செல்ல சந்தர்ப் பம், விற்பனையாகாது பொருட்கள் தேங்குதல், நின்றபடி பிரயாணம், கால்நடைகளினால் நன்மை கிட்டும், பயண முகவர் ஏமாற்றுதல், அல்சர் நோய் நீங்கும். |
| கும்பம் | வாகனத்தின் செயற்பாட்டினால் பிரயாணம் கைவிடல், கதிரையில் குந்துவதற்கு சதி முயற்சி, அயலவரின் உதவி உற்சாகமளிக்கும், காது சம்பந்தப்பட்ட நோய், சீட்டுக்கட்டி மனத்தாங்கல், கிரக சாந்திக்கு ஆலய தரிசனம் நல்லது, குறுக்காகப் பாயும் பிராணிகளினால் கேடு, வழக்கின் தீர்ப்பு சாதகமாக அமையும். |
| மீனம் | காதலியின் நடத்தையினால் வேதனை, வாகனம் கட்டுப்பாட்டை இழக்காமல் பார்ப்பது நல்லது. பணப்புழக்கம் தாராளம், தனித்துச் செல்வதை தவிர்ப்பது நல்லது. ஆவணமின்மையினால் தண்டம், திடீர் சிநேகிதம் உற்சாகம் தரும், வேலைவாய்ப்புக்கு வழி பிறக்கும், நாடு விட்டு நாடு மாற்றம், சுவீப்பில் பணம். |




# கல்வி மேம்பாட்டுக்கு உதவி
## மத்திய கல்லூரி மாணவர்கள் முன்மாதிரி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களினால் கல்லூரியில் கற்கின்ற வறுமைக்கோட்டிற்குட்பட்ட கல்வியைத் தொடர்கின்ற மாணவர்களுக்கான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பழைய மாணவர் பி.ரி.கைலாசநாதன் மத்திய கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியரும் சாரணியகுழுத் தலைவருமாகிய அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞாபகார்த்தமாக 500 மடக்கைப் புத்தகங்கள் இலவசமாக அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ் 500 மடக்கைப் புத்தகங்களில் 300 புத்தகங்கள் மத்திய கல்லூரி மாணவர்களுக்கும் 200 புத்தகங்கள் சகோதரப் பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இவ் மடக்கைப்புத்தகமானது கடற் சாரணியத்தினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட அமரர் ஜெகதீஸ்வரனின் ஞாபகார்த்த அஞ்சலிக்கூட்ட நிகழ்வில் கல்லூரியின் கணிதபாட இணைப்பாளர் வாகீசனால் வெளிட்டு வைக்க கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் பெற்றுக் கொண்டார்.

லணடனில் வாழ்கின்ற பழைய மாணவராகிய சிவலிங்கம் ஆகாஸின் உதவியுடன் பத்து மாணவர்களுக்கு பாதணிகளும் கார்த்தீபன் செல்லத்துரை அவர்களினால் 4 மாணவர்களுக்கு பாதணிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இப்பாதணிகள் கல்லூரி அதிபரினால் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அவுஸ்ரேலியாவில் வசிக்கின்ற பழைய மாணவன் ஆர். நந்தகுமாரினால் கல்வியினை மேற்கொள்கின்ற வறிய மாணவர்கள் மூவருக்கு கற்றலுக்கான உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியில் 7500 ரூபா ஆரம்ப வைப்பிலிடப்பட்ட வைப்புப் புத்தகத்தினை கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் மாணவர்களின் பெற்றோரிடம் கையளித்து வைத்தார். இந் நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட முதிரை நிலைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புளியங்குளத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் முதிரை மரங்களை ஏற்றி வந்த நபர் ஒருவரை அச்சுவேலி பொலிஸார் கடந்த 11 ஆம் திகதி, கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக அச்சுவேலி குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவிக்கையில், வழமையான இரவு ரோந்துப் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தவேளை புத்தூர் சந்திப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் வடி வாகனத்தை சோதனையிட்டபோது 100 சுண்ணாம்பு பைக்கற்றுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த மரங்களே மீட்கப்பட்டன. 30 முதிரை, வீட்டு நிலைகளுக்கு பயன் படுத்தக்கூடிய வகையில் சீவி சுண்ணாம்பு பைகளுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இதனைக் கைப்பற்றி உள்ளனர்.

இதனுடன் “வடி”ரக வாகனத்தயையும் பறிமுதல் செய்துள்ளனர். சாரதியை கைது செய்து நீதிமன்றில் ஆஜரப் படுத்தியுள்ளனர். (15)

# அபிவிருத்திச் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர அருட்சகோதரி ம. ஜீவந்தி அறிவித்துள்ளார். (90)

# கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதியின் மாவட்ட இணைப்பாளர் சதாசிவம் கனகரட்ணம் தலைமையில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட தொண்டராசிரியர்கள் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வுக்கு முன்னோடி ஆயத்தங்களை செய்வதற்காக இக்கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. (125)

# பலிக்குமா? காத்திருப்பு



(லாகூர்)

மீண்டும் அணியில் இடம் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றேன் என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்தார்.

ஐ.சி.சி.யின் சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் விளையாட முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இதற்கு முழங்காலில் ஏற்பட்டுள்ள காயம் ஒரு காரணம். காயத்துக்கு முறையான சிகிச்சை மேற்கொண்டுள்ளேன். விரைவில் பாகிஸ்தானுக்காக விளையாடுவேன். இதற்காக தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.

தற்போது, பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறேன். இதற்காக முன்னாள் சுழல் ஜாம்பவான் அப்துல் காதிரிடம் பயிற்சி மேற்கொண்டுள்ளேன். எங்களது பந்துவீச்சில் நிறைய வித்தியாசம் உள்ளது. பந்து வீச்சுக் குறித்த நிறைய விடயங்களை கற்றுத் தருகிறார். இது, வரும் காலங்களில் போட்டியில் சாதிக்க உதவும்.

ஒரு வீரர் ஆட்டத்திறனுடன் இருக்கும் போது, பந்து வீச்சில் அவர் செய்யும் சிறிய தவறுகளை இரசிகர்கள் கண்டுகொள்ளமாட்டார்கள். அதேநேரத்தில் அவர் ஆட்டத் திறனின்றித் தவிக்கும் போது, பந்து வீச்சில் செய்யும் சிறிய தவறுகளை பெரிய அளவில் பேசுவார்கள். இது குறித்துக் கவலைப்படப்போவதில்லை. கடினமாக பயிற்சி மேற்கொண்டு இழந்த ஆட்டத்திறனை மீட்பேன் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# டோனியை விஞ்சும் ஹோலி

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட்அணியின் அணித்தலைவர் டோனியை விட விளம்பர நிறுவனங்கள் அதிகம் விரும்பும் கிரிக்கெட் வீரராக ஹோலி உருவெடுத்துள்ளார்.

சூதாட்ட பிரச்சினை ஒருபக்கம் இருந்தாலும், கிரிக்கெட் வீரர்களை வைத்து விளம்பரம் தேடும் விளம்பர நிறுவனங்களும் அதிகரித்த வண்ணம் தான் உள்ளது.

சமீபகாலமாக டோனி தான் விளம்பரதாரர்களால் அதிகம் விரும்பப்பட்ட பிரபலமாக இருந்தார்.

ஆனால் தற்போது அவரது இடத்தை நிரப்ப ஆரம்பித்துள்ளார் ஹோலி. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஹோலி இடம் பெற்ற தொலைக்காட்சி விளம்பரங்களின் எண்ணிக்கை 200 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

மேலும் தற்போது ஹோலி 13 உற்பத்திகளை விளம்பரங்கள் மூலம் பிரபலப்படுத்தி வருகிறார். இதன் மூலம் ஆண்டுதோறும் அவர் ரூ. 40 கோடி வரை சம்பாதிக்கிறார்.

அதிலும் குறிப்பாக டோனியை விட இளையவர் என்பதும், டோனிக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார் என்பதும் ஹோலிக்கு கூடுதல் தகுதிகளாக அமைந்துள்ளன.

தற்போதைய நிலையில் டோனி தான் முதலிடத்தில் இருக்கிறார் என்பதும், அவர் ஆண்டுதோறும் ரூ. 100 கோடி வரை சம்பாதிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதி உறுதி



(லண்டன்)

அவுஸ்ரேலிய அணியுடனான கடைசி லீக் ஆட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவோம் என இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான சங்கக்கார தெரிவித்தார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இங்கிலாந்துடனான லீக் ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் விளையாடிய மிகச் சிறந்த இனிங்ஸில் இங்கிலாந்து அணிக்கெதிரான இந்தப் போட்டியும் ஒன்று. இந்த சதம் அணியின் வெற்றிக்கும், அரை இறுதி வாய்ப்பைத் தக்கவைக்கவும் உதவியதில் கூடுதல் மகிழ்ச்சி. ஜெயவர்த்தன அற்புதமாக ஒத்துழைத்தார். கடைசிக்கட்டத்தில் குலசேகரா அதிரடியாக விளையாடி எனக்கு நெருக்கடி இல்லாமல் பார்த்துக் கொண்டார். ஸ்வான், புரோட் ஓவர்களில் குலசேகர விளாசியது ஓட்டங்களைக் குவித்தமை ஆட்டத்தை எங்களுக்கு சாதகமாக்கியது. அடுத்து நடப்பு சம்பியன் அவுஸ்ரேலிய அணியுடன் நடக்கவுள்ள கடைசி லீக் ஆட்டத்தில் கவனம் செலுத்துவோம். அந்தப் போட்டியில் வென்று அரை இறுதிக்கு முன்னேற முடியும் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தாத்தாவின் சாதனை



(நியூயோர்க்)


90 வயதுக்கு மேற்பட்டோருக்கான பளு தூக்கும் போட்டியில் அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தை சேர்ந்த பெர்லிஸ் (வயது–91) புதிய சாதனையை படைத்துள்ளார்.

2005ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 135 பவுண்ட் என்ற முந்தைய உலக சாதனையை 187.2 பவுண்ட் எடையை 'பெஞ்ச் லிப்ட்டிங்' முறையில் தூக்கி இவர் முறியடித்துள்ளார்.

தனது 60ஆவது வயதில் பளுதூக்கும் போட்டியில் களமிறங்கிய பெர்லிஸ், 85 வயதுக்கு மேற்பட்டோருக்கான பளுதூக்கும் போட்டியில் 2009ஆம் ஆண்டு மாநில அளவில் 181 பவுண்ட் எடையை தூக்கி சாதனை படைத்தார்.

தொடர்ந்து 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் 181 பவுண்ட் பளு தூக்கும் போட்டியில் உலக சாதனையையும் இவர் படைத்துள்ளார்.

அறுவை சிகிச்சை காரணமாக 2012ஆம் ஆண்டு போட்டியில் பங்கேற்காத இவர், இந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் 187.2 பவுண்ட் எடையை தூக்கி தனது முந்தைய சாதனையை முறியடித்து, புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.



# பெடரரின் சாதனையை முறியடிப்பேன்

ரென்னிஸ் அரங்கில் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள பெடரரின் சாதனையை முறியடிப்பேன் என நடால் தெரிவித்துள்ளார். சுவிஸின் பெடரரின் தற்போதைய வயதை எட்ட எனக்கு இன்னும் நான்கு ஆண்டுகள் உள்ளது. இவர் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார். இதை காட்டிலும் அதிக பட்டங்கள் வென்று சாதிப்பேன்.முழங்கால் காயத்தில் இருந்து மீண்ட பின், பிரெஞ்ச் ஓப்பன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. காயத்தில் அவதிப்பட்ட போது, என் குடும்பத்தினரும், நண்பர்களும் மிகவும் ஆதரவு அளித்தனர். அச்சமயங்களில்போட்டியில் பங்கேற்காமல் இருந்ததால் மிகவும் விரக்தியாக இருந்தது. தற்போது உலகம் முழுவதும் சென்று போட்டிகளில் பங்கேற்ப தால் புத்துணர்வு கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். 27 வயதான நடால் இதுவரை 12 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதன் மூலம் அதிககிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர்கள் வரிசையில் 3ஆவது இடத்தை அவுஸ்ரேலியாவின் எமர்சனுடன் நடால் பகிர்ந்து கொண்டுள்ளார்.

# பயிற்சியாளருடன் மலர்ந்ததோ காதல்

செரீனா வில்லியம்சின் தொடர் வெற்றிக்கு பின்னால், அவரது பயிற்சியாளர் பாட்ரிக் மௌரட்டோக்லு உள்ளாராம். இவர்களுக்கிடையே காதல் மலர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (வயது-31). உலகின் முதல் நிலை வீராங்கனையான இவர், இதுவரை ஒற்றையரில் 16, இரட்டையரில் 13 என மொத்தம் 29 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். கடந்த 2010இல் காலில் ஏற்பட்ட காயத்தால் பல மாதங்கள் விலகியிருந்த இவர், 2011 மார்ச் மாதம் களமிறங்கினார்.

கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் முதல் சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார். கிராண்ட்ஸ்லாம் தொடரில் முதன் முறையாக முதல் சுற்றில் வீழ்ந்ததால், பாட்ரிக்கை, (வயது-42) பயிற்சியாளர் ஆக்கினார். இவரது வருகை மீண்டும் வெற்றிப்பாதையை காட்டியது. 2012இல் விம்பிள்டன், லண்டன் ஒலிம்பிக், யு.எஸ்.ஓப்பன், 2013இல் பிரெஞ்ச் ஓப்பன் என, அனைத்திலும் பட்டம் வென்று அசத்தினார் செரீனா. கடைசியாக பங்கேற்ற 31போட்டிகளிலும் தொடர்ந்து வெற்றி பெற்றார்.

இதனிடையே, சமீபத்தில் நடந்த விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பாட்ரிக், செரீனா மிகவும் நெருக்கமாக காணப்பட்டனர். இது, இவர்கள் இடையிலான காதலை உறுதி செய்தது.

இதுகுறித்து செரீனா கூறுகையில், ரென்னிஸ் குறித்து இருவருக்குமே தெரியும் என்பதால் தான், பெரும்பாலான விடயங்களில் எங்களுக்குள் ஒத்துப் போகிறது. நாங்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக உள்ளோம். 11 ஆண்டுகளுக்கு பின் பிரெஞ்ச் ஓப்பனில் கோப்பை வென்றது மகிழ்ச்சி என்றார்.

பாட்ரிக் கூறுகையில், செரீனா வெற்றிக்கு நான் தான் காரணம் என்று எப்படி கூற முடியும். செரீனா களத்துக்கு வெளியிலும் மகிழ்ச்சியாக உள்ளதால் தான், போட்டிகளில் வெற்றி கிடைக்கிறது. பல்வேறு தொடர்கள் உள்ளதால், தேவையற்றதை பேசினால் செரீனா கவனம் சிதறி விடும் என்றார்.









வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று காலை டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. பத்து ஓவர்கள் கொண்ட இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் மைக்கல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதவுள்ளது. (17)

# முன்பள்ளி விளையாட்டு

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்றைய தினம் 1.30 மணிக்கு இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள விநாயகர் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி நிர்வாகி ம. சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இப்போட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாக மூட்டுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# கிண்ணம் வென்றது நாவாந்துறை சென்.மேரிஸ்



(யாழ்ப்பாணம்)

பாடுமீன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட தூயஒளி வெற்றிக்கிண்ணத்தை நாவாந்துறை சென்.மேரிஸ் அணி, கைப்பற்றிக் கொண்டது.

1986ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவாக பாடும்மீன் விளையாட்டுக்கழகம், யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையில் தூயஒளி வெற்றிக்கிண்ண கால்பந்து சுற்றுப்போட்டி என்ற பெயரில் பாடுமீன் விளையாட்டுக்கழகம் நடத்தியது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முன்னணி அணிகள் பல பங்குகொண்டன. இருப்பினும் இதன் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின.

முதல் பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணியின் ஆதிக்கம் முழுமையாகக் காணப்பட்டது. போட்டியின் 4 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இந்நிலையில் முதற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி ஒரு கோல் போட்டு சமன் செய்தது. தொடர்ந்து இரு அணிகளும் வெற்றிக் கோலைப் போட்டுக் கொள்ளும் முனைப்புடன் செயற்பட்டபோதும் அது இறுதி வரை முடியவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

# காலிறுதியில் கிறாஸ் ஹோப்பர்

## விளையாட்டுச் செய்திகள்


இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் காலிறுதிக்கு கிறாஸ் ஹோப்பர் அணி தகுதி பெற்றுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, காலிறுதித் தெரிவிற்கான போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி–யினை எதிர்த்து கிறாஸ் ஹோப்பர் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி. 32 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வல்லவக்குமரன் 77, இராகுலன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சரண்ராஜ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 181 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ்ஹோப்பர் அணி டிலோசன், காந்தசீலன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது. இறுதியில் கிறாஸ் ஹோப்பர் அணி 36 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் முதலாவது விக்கெட்டுக்காக டிலோசன், சாந்தசீலன் 177 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இதில் டிலோசன் 86, சாந்தசீலன் 74 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் கிறாஸ்ஹோப்பர் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

# ஊரெழு றோயலை வீழ்த்தி கிண்ணம் வென்றது ஞானமுருகன்



(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி கைப்பற்றிக் கொண்டது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் யாழ். கால்ப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடாத்திய அணிக்கு 9 பேர் கொண்ட கால்ப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதிப் போட்டி கடந்த வாரம் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியும், ஊரெழு றோயல் அணியும் மோதின.

மைதானம் நிறைந்த இரசிகர்கள் மத்தியில் ஆரம்பமான இறுதிப்போட்டியின் 14 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு ஒன்று கிடைத்தது. எனினும் அந்த வாய்ப்பினை ஞானமுருகன் அணி கோலாக மாற்றத் தவறியது. முதல் பாதியாட்டம் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டன. எனினும் கோல் அடிக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

போட்டியின் நேரம் முடிவுக்கு வரும் போது இரு அணிகளும் கோல் எதுவும் பெற்றிருக்கவில்லை.

தொடர்ந்து சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இச்சுற்றுப்போட்டியில் சிறந்த கோல் காப்பாளராக மயிலங்காடு ஞானமுருகன் அணியின் சயந்தன், இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக அதே அணியின் தவரூபன், தொடர் ஆட்ட நாயகனாக ஊரெழு றோயல் அணியின் கபில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# ஞானரூபன் கோல் மழை கிண்ணம் வென்றது ஹென்றிஸ்

(அராலி)

அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணி நடத்திய யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இளவாலை ஹென்றிஸ் அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

அணிக்கு 7 பேர் கொண்ட இக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் இறுதிப் பேர்ட்டியில் அராலி பாரதி அணியை எதிர்த்து இளவாலை ஹென்றிஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் ஹென்றிஸ் அணி 4:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்தில் ஹென்றிஸ் அணி மேலும் 3 கோல்கள் போட்டது.

பதிலுக்கு பாரதி அணியினால் ஒரு கோல் மாத்திரம் பெற முடிந்தது. இறுதியில் ஹென்றிஸ் அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஹென்றிஸ் அணி சார்பாக ஞானரூபன் 5 கோல்களைப் பெற்றுக்கொடுத்தார். இச்சுற்றுப்போட்டியில் மொத்தமாக 14 கோல்களைப் பெற்ற இவர் தொடர் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணியினை வெற்றி கொண்டது.

# கால்பந்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டுவரும் 40 வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நாளை மாலை 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும், தொடர்ந்து நடைபெறும் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி அணியும் மோதவுள்ளன.




யாழ். கொட்டடி சனசமூக நிலையம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஊரெழு றோயல் அணியைக் காணலாம். அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் அளவெட்டி மத்தி அணியை வீழ்த்தி ஊரெழு றோயல் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# உருளைக் கிழங்கில் வாயு இல்லை!

★ உணவில் தினமும் நாம் சேர்க்கும் காய்கறிகளில், கீரைகளில், கிழங்கு வகைக-ளில் எந்தக் கெடுதியும் இல்லை. அந்த உணவைச் சமைக்கும் முறைகளினால்தான் உடலுக்குக் கெடுதி ஏற்படுகிறது. நாம் எந்தக் குழம்பு செய்தாலும் முதலில் பூண்டு, இஞ்சி அரைத்து எண்ணெய்யில் நன்றாக வதக்குகிறோம். காய்கறிகளை அதில் போட்டு வேக வைக்கிறோம். இப்படிச் செய்வதால் குழம்பில் பூண்டு, இஞ்சி, எண்ணெய் வாசனைதான் தூக்கலாகத் தெரியுமே தவிர, அதில் போடப்படும் காய்கறிகளின் வாசனை வருவதில்லை. எப்போதும் எண்ணெய்யை மிகக் குறைவாகப் பயன்படுத்த வேண்டும்.

★ சிலர் வெங்காயத்தை நன்கு எண்ணெய்யில் வதக்குவார்கள். சைவ உணவோ, அசைவ உணவோ இதை ஒரு வழக்கமாகவே வைத்து இருக்கிறார்கள். இதனால் வெங்காயத்தின் சத்துகள் அழிந்து விடுகின்றன. இதற்குப் பதிலாக வெங்காயத்தை சிறிய துண்டுகளாக நறுக்கி, எண்ணெய் ஊற்றாமல் வெறும் சட்டியில் போட்டு சிறிது வதக்க வேண்டும். பிறகு அதில் தண்ணீர் ஊற்றி வெங்காயத்தை வேக வைக்க வேண்டும். அதன் பிறகு காய்கறிகளை அதில் போட்டு வேக வைக்க வேண்டும். இப்படிச் செய்வதால், வெங்காயத்தின் சத்துகள் நமக்கு அப்படியே கிடைக்கின்றன.

★ மஞ்சள் உடலுக்கு மிகவும் நல்லது. கிருமி நாசினியும் கூட. புற்று நோய் வராமல் தடுக்கக் கூடியது. மஞ்சள் தூளை எண்ணெய்யில் போடக் கூடாது. அதனால் மஞ்சள் தூளில் உள்ள சத்துகள் அழிந்து விடுகின்றன. எண்ணெயில் மஞ்சள் தூளைப் போடாவிட்டால் மஞ்சள் வாசனை அடிக்குமே என்று பயப்பட வேண்டியதில்லை. மஞ்சளைக் குறைவாகப் போட்டால் மஞ்சள் வாசனை தெரியாது.



★ நாம் சாப்பிட வேண்டிய பல உணவுப் பொருட்கள் வாயுத் தொல்லையை ஏற்படுத்திவிடும் என்பதற்காகச் சாப்பிடாமல் விட்டு விடுகிறோம். உதாரணமாக உருளைக் கிழங்கு, வாழைக்காய் என்றால் பலர் தொட்டுக் கூட பார்க்கமாட்டார்கள். உருளைக் கிழங்கை வேக வைக்க வேண்டும். பின்பு அதைச் சிறிது சிறிதாக உடைத்துவிட வேண்டும். தாளித்த கடுகு, கடலைப் பருப்பு இரண்டையும் உருளைக் கிழங்குடன் போட்டுப் புரட்ட வேண்டும். பச்சை மிளகாய், உப்பு இரண்டையும் சேர்க்க வேண்டும். எலுமிச்சம் பழச் சாறைப் பிழிந்துவிட வேண்டும். இப்படிச் செய்யப்பட்ட உருளைக் கிழங்கு பொடிமாஸில் எந்த வாயுத் தொல்லையும் வரவே வராது. உருளைக் கிழங்கை எண்ணெய்யிலேயே வேக வைத்து, வதக்கிச் சாப்பிட்டால், வாயுத் தொல்லை மட்டுமல்ல, கொலஸ்ட்ரோல் பிரச்சினையும் வந்துவிடும்.

★ வாழைக்காயை வெறுமனே வேக வைத்து அதில் மிளகுத்தூள் போட்டுச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை வராது.


★ காரத்துக்கு மிளகாய் சேர்ப்பதைவிட மிளகு சேர்ப்பது நல்லது. ஆனால் அதைக் கூட அதிக அளவில் பயன்படுத்தக் கூடாது. வடையில் கூட இஞ்சி, மிளகு சேர்க்கலாம்.

★ இப்போது கொலஸ்ட்ரோல் பிரச்சினை, இதய நோய்கள், மாரடைப்பு போன்றவை அதிகமாகி வருவதால், தயிர் செய்யும்போது, கொழுப்புச் சத்து மிகவும் குறைந்த பாலை வைத்துத்தான் தயிர் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இதயம் சார்ந்த நோய்கள், இரத்த அழுத்த நோய்கள் நம்மை அணுகாமல் பார்த்துக் கொள்ள முடியும். தயிரில் நிறைய கல்சியம் உள்ளது.

★ குழம்புக்குத் தேவையான காய்களைத் தனியாக வேக வைக்கும்போது குறைவான தண்ணீரில் வேக வைக்க வேண்டும். அதிக அளவு தண்ணீரில் வேக வைத்து, காய்கறிகள் வெந்த பின்பு, தண்ணீரைக் கீழே ஊற்றுவதால் எந்தப் பயனும் இல்லை. ஒருவேளை அதிகத் தண்ணீரில் வேக வைத்துவிட்டால், அந்தத் தண்ணீரைக் கீழே கொட்டாமல், குழம்பு செய்வதற்குப் பயன்படுத்தினால் சத்துகள் வீணாகாது.

(விஜி வரதராஜனின் 'சமையல்' நூலில்)

"ராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ!
ராஜ சுகம் தேடி வர தூது விடும் கண்ணோ!
சேலைச் சோலையே! பருவ சுகம் தேடும் மாலையே!
பகலும் உறங்கிடும் ராத்திரியில் பூத்திருக்கும் தாமரைதான் பெண்ணோ!"




# உவமைகள் பலவிதம்

- என். சொக்கன் -

தங்கமகன் படத்திற்காக புலமைப்பித்தன் எழுதி இளையராஜா இசையில் வந்த பாடல் அது. பாடியவர்கள் எஸ்பிபி யும் ஜானகியும்.

பெண்ணைத் தாமரைக்கு ஒப்பிடுவது பரவாயில்லை, அதென்ன ராத்திரியில் பூத்திருக்கும் தாமரை?

இயற்கையாக, தாமரை பகலில்தான் மலரும். இரவில் கூம்பிவிடும். இதைத்தான் எல்லா இலக்கியங்களிலும் திரும்பத் திரும்பப் பலமுறை படித்திருக்கிறோம்.

ஆனால் இங்கே, "ராத்திரியில் பூத்திருக்கும் தாமரை" என்று குறிப்பிட்டுச் சொல்லி அதைப் பெண்ணுக்கு உவமையாக்குகிறார் புலமைப்பித்தன். உலகத்தில் எங்கும் இல்லாத ஒரு பொருளை உவமையாகச் சொல்வதால், தமிழ் இலக்கணப்படி இதற்கு "இல் பொருள் உவமை அணி" என்று பெயர்.

கிட்டத்தட்ட இதேமாதிரி இன்னொரு விஷயம், "உயர்வு நவிற்சி அணி". பல நேரங்களில் இதையும் "இல்பொருள் உவமை அணி"யையும் சேர்த்துக் குழப்பிக்கொள்வோம்.

"நவில்தல்" என்றால் சொல்லுதல், "உயர்வு நவிற்சி அணி" என்றால், இயல்பான ஒரு விஷயத்தை உயர்வாக, மிகைப்படுத்திச் சொல்லுதல்.

இதேபோல், "இயல்பு நவிற்சி அணி"யும் உண்டு. இயல்பான ஒரு விஷயத்தை அப்படியே இயல்பாகச் சொல்லுதல்.

உதாரணமாக, ஒரு பெண்ணைப் பார்த்து, "உன்னுடைய குரல் மிக இனிமை" என்றால் அது இயல்பு நவிற்சி அணி, ஆனால், "உன்னுடைய குரலைக் கேட்டுக் குயில்கள்கூடத் தோற்றுவிட்டன" என்று சொன்னால், அது உயர்வு நவிற்சி அணி. அவளுடைய குரல் இனிமையானதுதான், ஆனால் "குயில்களோடு போட்டி போட்டு ஜெயித்த குரல்" என்று அதை மிகைப்படுத்துகிறார் கவிஞர்.

இன்னும் எளிமையாக ஓர் உதாரணம் வேண்டுமென்றால், வீட்டில் பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு அலுமாரி வாங்குகிறோம், வருகிற விருந்தினர் அதைப் பார்த்து வியக்க, "ஆமாம், பத்தாயிரம் ரூபா விலை" என்று நாம் சொன்னால் இயல்பு நவிற்சி, "சும்மாவா? முப்பதாயிரம் ஆச்சு" என்றால், அது உயர்வு நவிற்சி. "இதென்ன பெரிய விஷயம்? எங்களுடைய பழைய வீட்டில் இதைவிட அட்டகாசமான ஒரு அலுமாரி இருக்கு" என்று கதையளந்தால், அது இல்பொருள்

மழை பெய்கிறது, அதைப்பற்றி நண்பருக்கு ஃபோனில் சொல்லும்போது, "தெருவெல்லாம் வெள்ளம்" என்றால் இயல்பு நவிற்சி, "வெள்ளத்திலே நாலைஞ்சு திமிங்கிலமே தட்டுப்படுதடா" என்றால், அது உயர்வு நவிற்சி அணி, "வெள்ளத் தண்ணீரில் இரண்டு அன்னம் நீந்தி வருது" என்றால், இல்பொருள்.

இந்த விஷயத்தில் இதுவா அதுவா என்று மயக்கம் ஏற்படுவது இயல்பு. உதாரணமாக, ஒரு கம்பன் பாட்டு. ஜாம்பவான் அனுமனைப் புகழ்ந்து சொல்வது: "மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வர வல்லீர்."

மாரி என்றால் மழை, அந்த மழையினால் துளிகள் ஏற்பட்டு, அவை தாரையாகத் தரையை நோக்கிப் பொழிகின்றன, அனுமார் விரும்பினால், மிகச் சிறிய உருவம் எடுத்து, அந்த மழைத் தாரைகளுக்கு நடுவே புகுந்து வந்துவிடுவார்!

இப்போது சொல்லுங்கள், இது இயல்பு நவிற்சியா? உயர்வு நவிற்சியா? இல்பொருளா?

# தமிழ்த் தாகம்

இராமனுக்குப் "பெருமாள்" என்று பெயர். அந்தப் பெருமாளே பூசித்து வந்ததால் "பெரிய பெருமாள்" எனப் பெயர் பெற்றவர் ஸ்ரீரங்கநாதர்.


ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதர் பள்ளிகொண்டிருக்கும் அழகே தனி. தென்திசைக்கு திருமுகம். வடதிசைக்கு முதுகு. மேற்கே தலை. கிழக்கே பாதம் என்று படுத்திருக்கிறார். விபீடணன் வேண்டியதால் தென்திசை இலங்கை நோக்கிப் படுத்தார் என்பதால்-

"குடதிசை முடியை வைத்து
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டி
தென்திசை இலங்கை நோக்கி"

என்று அருளினார் ஆண்டவனில் ஆழ்ந்த ஆழ்வார்.

ஆனால் ஆழ்வாரில் ஆழ்ந்த உரையாசிரியர்களோ தென்திசை நோக்கிய திருக்கோலத்துக்கு வேறு காரணம் கண்டார்கள். முரட்டு சமஸ்கிருதம் வழங்கும் வடதிசைக்கு முதுகு காட்டி, ஆழ்வார்களின் ஈரத்தமிழ் நடை போடும் தென்திசைக்கு முகம் காட்டினார் என்று அனுபவித்தார்கள். முதுகு காட்டுவதைவிட முகம் காட்டுவதே மரியாதை என்பதால், தமிழுக்குத் தலை வணங்கும் பெருமாளாக இதனை உணர்ந்தனர். மதுரகவி ஆழ்வார் நீங்கலாக மற்றைய பதினொரு ஆழ்வார்களும் பாடித் துதித்த பதி இந்தத் திருவரங்கம். 'கடல் நிறக்கடவுள் எந்தை காவிரிக் கரையில் கை வைத்துப் படுத்தது இந்தத் தமிழ்த் தாகம் தணிவதற்குத்தான்...

("ஒரு தலம், ஒரு பாடல், ஒரு நயம்" நூலில் சுகி.சிவம்)



# வண்ணத்துப்பூச்சியும் விசித்திர ஓவியனும்

[சிறுவர் கதை]

மனித வாழ்க்கை போல் நீண்டு நெடிந்து சுழித்தோடும் ஒரு ஆற்றின் கரையில் அமைந்திருந்தது ஒரு வனம். அந்த வனத்தில் ஜம்பு என்றொரு வண்ணத்துப்பூச்சி இருந்தது.

சாதாரண வண்ணத்துப்பூச்சிகளைப் போல் வண்ண-வடிவ விசித்திரங்களை கொண்டதல்ல நமது ஜம்பு. அது பிறவியிலேயே வெண்ணிறம் கொண்டதாக இருந்தது. மற்ற வண்ணத்துப்பூச்சிகள் வண்ணமயமாக இருந்ததைப் பார்த்து ஜம்புவுக்கு அசூயையும் விசனமும் ஏற்பட்டது. இயற்கைக்கு தன்னை படைக்கும்போது மட்டும் ஏன் இந்த பாரபட்சம் என வருந்தியது ஜம்பு. நியாயம்தானே?

வெறும் வெள்ளை நிறத்தால் கிண்டலுக்கும் கேலிக்கும் ஜம்பு ஆளானது. மலர் விட்டு மலர் தாவி மகரந்தம் உறிஞ்சும்போது ஜம்புவின் கண்ணீரால் தேனும் உப்பு கரித்தது.

நான் ஒரு வண்ணத்துப்பூச்சியா அல்லது ஒரு குட்டிப் பறவையா? ஜம்புவுக்குக் குழப்பமாக இருந்தது.

ஜம்புவுக்கு ஒரே ஒரு நண்பன் இருந்தான். வனத்தின் நடுவில் இருந்த ஒரு பெரிய மலையில் அமைந்திருந்த ஒரு சுனைக்கு அருகே ஒரு இளநீல மரம் வளர்ந்துகொண்டிருந்தது. அதுதான் ஜம்புவின் தோழன்.


தனது நிறம் குறித்த வருத்தம் வரும்போதெல்லாம் அந்த இளநீல மரத்தின் அடிவாரத்தில் ஓய்வெடுப்பதை ஜம்பு வழக்கமாகக் கொண்டிருந்தது.

நண்பனின் வேதனையைக் காண சகிக்காத மரம், விசித்திர ஓவியனைப் பற்றிக் கூறியது.

"ஜம்பு, ஜம்பு, உனக்கு விசித்திர ஓவியன் உதவி செய்வான், தெரியுமா?" என்றது இளநீல மரம்.

"விசித்திர ஓவியனா? அட, யாரது? ஓவியன் என்றால் படம் வரைபவனா? எங்கிருக்கிறான்? எப்படி உதவுவான்?" என்று கேள்விகளை அடுக்கியது ஜம்பு.

இளநீல மரம் விசித்திர ஓவியனின் மாந்திரீக ஜாலத்தை விதந்தோதியது. அவன் இருக்கும் இடத்தை ஜம்புவுக்கு சொன்னது.



விசித்திர ஓவியன் தனக்கு வண்ணம் அளிப்பான் என்ற ஆவலில் ஜம்பு என்கிற வண்ணத்துப்பூச்சி பறந்தது, பறந்தது, பறந்துகொண்டே போனது.

வேகமாகப் பறக்க ஜம்பு என்ன பருந்தா? அது பல நாட்கள் செலவிட்டு வனத்தின் மறுபக்கம் விசித்திர ஓவியன் வாழ்ந்த மர வீட்டை அடைந்தது.

மர வீட்டின் வாசலில் வீட்டைவிடப் பெரிதான ஒரு பாறை இருந்தது. அந்த பாறையின் மேல் ஒரு மனிதன் கையில் ஒரு கொத்து நெற்கதிர்களை பிடித்திருந்தான். அம்மனிதன் அந்தக் கொத்தை அப்படியும் இப்படியும் ஆட்டியவாறு இருந்தான்.

அவன் தலையில் ஒவ்வொரு முடியும் ஒவ்வொரு வண்ணத்தில் இருந்தது. கண்கள் இரண்டும் வெவ்வேறு வண்ணங்களில் இருந்தன. அதே போலக் காதுகளும்.

அவனைப் பார்த்ததும் அவன்தான் விசித்திர ஓவியன் என ஜம்புவுக்குப் புலப்பட்டது. "விசித்திர ஓவியனே, விசித்திர ஓவியனே, எனக்கு வண்ணம் தருவாயா?" என்று ஜம்பு கேட்டது.

"நான் உனக்கு வண்ணம் தருகிறேன், நீ எனக்கு ஒரு பாடல் பாடு வாயா?" என்று விசித்திர ஓவியன் கேட்டான். அவன் பற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வண்ணத்தில் இருந்தது.

ஜம்புவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்து ஒரு நீண்ட பாடலைப் பாடியது. ஜம்பு பாடப் பாட விசித்திர ஓவியன் நெற்கதிர் கொத்தைத் தூரிகையாகக் கட்டத் துவங்கினான்.

ஜம்பு பாடப் பாட மழைமேகங்கள் திரண்டன, ஒன்றுடனொன்று மோதின, பெருமழை பெய்தது. ஜம்பு பாடலை நிறுத்தியது. மேகங்கள் விலகி கதிரவன் வெளிப்பட்டான். ஏழு வண்ணங்களுடன் வானவில்லும் மெல்ல வெளிவந்தது.

நெற்கதிர் தூரிகையை வானவில்லின் வண்ணங்களில் தோய்த்து வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளுக்கு வண்ணம் கொடுத்தான் விசித்திர ஓவியன்.

வண்ணமே இல்லாமல் வாழ்க்கையில் பலவித இன்னல்களுக்கு உள்ளான வண்ணத்துப்பூச்சி, விசித்திர ஓவியனுக்கு நன்றி சொல்லிவிட்டு தனது வீட்டிற்கு பறந்தது, பறந்தது, பாடிக்கொண்டே பறந்தது. ஆனால் இம்முறை அதன் பாடலில் விகசித்தது புது வாழ்க்கை அளித்த நம்பிக்கையின் புத்துணர்வு.

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

12

- டாக்டர். பிரகாஷ் -

Motor skills என்பது தசைகளின் செயல்திறன்களைக் குறிப்பதாகும். gross motor skills and fine motor skills என்று இவைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். Gross motor skills என்பவை புஜங்களின் அசைவுகள், கால், பாதம் அல்லது ஒட்டு மொத்த உடலின் அசைவைக் கொண்டவை. உடலின் பெரிய தசைகளின் ஒருங்கிணைப்பைக் கொண்டு நாம் செய்யும் செயல்களான ஓடுதல், ஊர்தல், நடத்தல், நீச்சலடித்தல், பேலன்ஸ் செய்தல், பந்து எறிதல் போன்றவைகளை இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

fine motor skills எனப்படுபவை, துல்லியமாக கைகள், மணிக்கட்டு, கை விரல்கள், பாதங்கள், உதடுகள், நாக்கு போன்றவற்றைக் கொண்டு செய்யப்படும் சிறிய நுண்ணிய அசைவுகள்.. செயல்கள்... விரல்களைக் கொண்டு சிறு பொருட்களை எடுப்பது, கரண்டி, முள்கரண்டி உபயோகித்து உணவு உண்ணுதல், பென்சில், பேனாவை உபயோகித்து எழுதுதல், வரைதல் போன்ற அன்றாடச் செயல்களைச் சொல்லலாம். குழந்தைகளிடம் இந்த இரண்டு மோட்டார்




திறன்களும் ஒன்றிணைந்தே வளர்கின்றன. மற்றும் இவை இரண்டிற்கும் இடையில் ஒருங்கிணைப்பும் உள்ளது.

குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும், இந்த இரண்டு திறன்களுமே படிப்படியாக வளர்ந்து, ஆறு முதல் 12 வயது வருகையில் குழந்தை ஏறக்குறைய இந்த எல்லா திறன்களிலும் தேர்ச்சி பெற்று விடுகிறது.

**Fine motor skills ஐ மேம்படுத்தும் விளையாட்டுக்கள்:**

இரண்டு மாதக் குழந்தைகளுக்கு அருகில் கலர் கலரான கைக்குட்டைகளை பரப்பி வைத்தால், அதை கையினால் தொட்டு எடுக்க முயற்சிக்கையில் fine motor வளர்ச்சி ஏற்படுகிறது. குழந்தையின் கைக்கெட்டுமாறு சிறு சிறு பொம்மைகளைத் தொங்க விட்டு, அவைகளைத் தொட முயற்சிக்கையில், கைகளைக் கொண்டு ஆட்டுகையில், சத்தம் வருகையில் செயல்-விளைவுத் தத்துவத்தை குழந்தைகள் புரிந்து கொள்வதோடு, அவர்களின் cognitive வளர்ச்சியும் மேம்படுகிறது.

ஆறு மாதக் குழந்தை சப்தமிடும் பொம்மைகளை இயக்க முயற்சிப்பதன் மூலம் இத் திறன்களை வளர்த்துக் கொள்கிறது.

எட்டு மாதக் குழந்தையிடம் கீழே கிடக்கும் பொம்மைகளை அதற்குரிய பெட்டியில் போடச் சொல்வதன் மூலமும், இரண்டு பொருள்களை ஒன்றுடன் ஒன்று மோதி சப்தமேற்படுத்த வைத்து (இரண்டு கரண்டிகள், இரண்டு தட்டுக்கள்) கைகளைத் தட்டி ஓசை எழுப்பச் சொல்லியும் இத்திறனை வளர்க்கலாம்.

ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தையிடம், பேப்பரைக் கிழித்துப் போடச் செய்யலாம். இதைச் செய்கையில் அவர்களுக்கு ஒரு அலாதி சுகம்தான்.

பதினெட்டு மாதக் குழந்தையிடம் ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்திற்கு தண்ணீரை மாற்றச் சொல்லவும்.

இரண்டு வயதுக் குழந்தையானது ஒரு டம்ளரிலிருந்து இன்னொரு டம்ளருக்கு தண்ணீரை சிந்தாமல் முழுவதும் மாற்றி விட்டதென்றால், அதன் ஃபைன் மோட்டார்த் திறன்கள் நன்கு வளர்ச்சியடைந்து விட்டதாகக் கொள்ளலாம்.

**Gross motor skills மேம்படுத்தும் விளையாட்டுக்கள்:**

ஆறு மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளிடம் வண்ணங்களாலான பொம்மைகளை அருகில் வைத்து, அவர்கள் நகர்ந்து, தவழ்ந்து பொம்மையை நோக்கிச் செல்வதை ஊக்குவிக்கலாம்.

எட்டு மாதங்கள் ஆன குழந்தையை கதிரை, அல்லது அட்டைப் பெட்டிகளை சுரங்கம் போல வடிவமைத்து, அதற்குள் ஊர்ந்து வரச் செய்யலாம். குட்டிக் குட்டி அட்டைப் பெட்டிகளை கயிற்றினால் ஒன்றன் பின் ஒன்றாகக் கட்டி, ரயில் போல அவைகளை இழுக்கச் செய்யலாம். வித விதமான வண்ணங்களில் பந்துக்களைக் கொடுத்து அவர்கள் அதை எப்படிக் கையாளுகிறார்கள் (தள்ளுதல், உதைத்தல், எறிதல், உருட்டுதல்) என்று பார்த்து பயிற்சி கொடுக்கலாம்.

ஒரு வயதுக் குழந்தைகளுக்கு, கலர் கலரான பிளாஸ்டிக் வளையங்களைக் கொடுத்து, அவர்களை அதனுள், வெளியே, சுற்றி, வட்டமடித்து என்று பலவாறாக விளையாட வைக்கையில் பல க்ரொஸ் மோட்டார் திறன்கள் மேம்படுகின்றன. இரண்டு வயதான குழந்தைகளை, பூங்காவில் இருப்புக் கம்பியைப் பிடித்துத் தொங்கப் பழக்கலாம். மெத்தையிலோ, குவிக்கப் பட்டுள்ள பந்துக்களின் மேலோ குதிக்கச் செய்கையில் கால் தசைகளுக்கு நல்ல பயிற்சி ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் balance செய்வதற்கும் கற்றுக் கொள்கின்றனர்.

குழந்தை வளர்ப்பில், இந்தத் திறன்கள் இன்றியமையாதவையாகும்.

(தொடரும்)



# கணினி உலா

## Samsung Galaxy 4 Mini செல்பேசி!




சம்சுங்கின் எஸ்4 ஸ்மார்ட் போன் வெளியாகி விற்பனையில் சாதனைகளை படைத்து வரும் நிலையில் எஸ்4 மினியை அந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது 4.3 அங்குல திரை மற்றும் 8 மெகா பிக்ஸல் கமராவுடனும், டுவல்கோர் புரசசர் மூலம் இயங்குவதுடன் இதன் நிறை 107 கிராம்களாகும். இம்மாதம் லண்டனில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இது உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளது.

ஐரோப்பிய சந்தையில் 4.0 அங்குல திரையைக் கொண்ட ஸ்மார்ட் போன்களுக்கு நல்ல கேள்வி நிலவுவதை கருத்தில் கொண்டு மினி மொடல்களை சம்சுங் வெளியிட்டுவருகின்றது.

## All in One Robot கமரா!



கமராக்களின் வளர்ச்சி எவ்வளவு எட்டியிருந்தாலும், ஒவ்வொரு டெக்னோலஜிக்கும் தனி தனி கமெராதான் பயன்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு கமெராவும் ஒவ்வொரு ஃபோர்மட் என்பதால் கடைசியில் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் போது ரிஸல்ட்ஸ் வேறுபடும். இதை எல்லாம் கருத்தில் கொண்டு என்.எச்.கே என்னும் ஜப்பான் நிறுவனம் 8 கமெராக்களை ஒரு கன்ட்ரோலில் இயங்க வைக்கும் ரோபோட்டிக் கமெராவை கண்டுபிடித்திருக்கிறது. இதன் மூலம் ஒரு தடவை ஷூட் செய்யும் போது அனைத்து ஆங்கிள்களும் ஒவ்வொரு கமெரா மூலம் தனி தனியாய் கிடைக்கும் - 3டி கிடைக்கும் அதுபோல் ஸ்லோமோஷனும் 360 டிகிரியில் ஸ்பெஷல் எபக்ட்ஸ் இல்லாமல் கிடைக்க பெறலாம். இது ஷூட் செய்வது மட்டுமில்லாமல் பேன் லெப்ட் / பேன் ரைட் / டில்ட் அப் / டில்ட் டவுன் கூட செய்ய லாம். இது இரண்டு சூப்பர் மோட்டார்கள் மூலம் எல்லா கமெராக்களும் ஒரே நேரத்தில் செயற்படும்.

## விண்டோஸ் 8.1 ஐ இலவசமாகப் பெற்றுக்கொள்ள




விண்டோஸ் 8 மற்றும் விண்டோஸ் ஆர்.டி. வாங்கிப் பயன்படுத்துவோருக்கு, வர இருக்கும் விண்டோஸ் GS என அழைக்கப்பட்ட விண்டோஸ் 8.1 என்னும் மேம்படுத்தப்பட்ட சிஸ்டம் இலவசமாகவே கிடைக்கும் என, மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது. விண்டோஸ் 8.1 பல அப்டேட் புரோகிராம்கள் அடங்கிய தொகுப்பாக இருக்கும் எனவும். விண்டோஸ் 8 பயன்படுத்தியவர்கள், இதற்கு மாறிக் கொள்ளத் தயாராக இருக்கும்போது உடனே வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

வரும் ஜூன் மாத இறுதியில், விண்டோஸ் 8.1. சிஸ்டத்தின் வெளியீட்டுக்கு முந்தைய பதிப்புக் கிடைக்கும் எனத் தெரிகிறது. அந்தத் தொகுப்பு குறித்த மக்களின் பின்னூட்டங்களைப் பெற்ற பின், இறுதி வடிவம் மக்களுக்கு இலவசமாகக் கிடைக்கும்.

## தானாக இன்பொக்ஸ் சுத்தம் செய்திட



ஹொட் மெயில் மற்றும் அவுட்லுக் டொட் கொம், வடி கட்டிகளுக்கு மேலாகச் செயற்படும் வகையில், Sweep என்னும் டூலைத் தருகின்றன. இந்த டூல், இன்பொக்ஸை, சுத்தமாகவும், ஓர் ஒழுங்கு முறையோடும் வைத்திருக்க உதவுகிறது.

குறிப்பிட்ட ஒருவரிடம் இருந்து வந்த ஒரு மெயிலைத் தேர்ந்தெடுத்து, இந்த டூல் மூலம், அவர் அனுப்பியுள்ள அனைத்து மெயில்களையும் அழிக்கலாம். இந்த டூலைப் பயன்படுத்தும் வழிகளை நம் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம். ஸ்வீப் டூலைப் பயன்படுத்த, ஏதேனும் ஒரு ஈமெயிலை அடுத்துள்ள பொக்ஸில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். பின்னர், மேலாக உள்ள டூல் பாரில் கிடைக்கும் ஸ்வீப் பட்டன் அருகே உள்ள, கீழ் நோக்கிய அம்புக் குறியில் கிளிக் செய்திடவும். பின்னர் கிடைக்கும் மெனுவில், உங்களுக்குத் தேவையான செயறபாட்டினைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளலாம்.

## ஆளில்லா விமானம் மூலம் பீட்சா டெலிவரி!



ஆளில்லா விமானத்தை இராணுவம்தான் பயன்படுத்த வேண்டுமா என்ன? தற்போது பிட்சா" தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற நிறுவனமான "டோமினோஸ்" ஆளில்லா விமானம் மூலம், விரைவாக பிட்சாக்களை விநியோகம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது. விரைவில் இதன் மூலம் 4 மைல் சுற்றளவு கொண்ட வீடுகளின் மொட்டை மாடிகளில் சுடச்சுட சுவையான பிட்சாக்களை கொண்டுசென்று கொடுக்க முடியும் என அந்நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. 8 இறக்கைகளுடன் கூடிய சிறிய ரக ஆளில்லா விமானத்தை இதற்கான சோதனை முயற்சிக்காக பயன்படுத்தி, அதில் வெற்றி பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவில், தரை மட்டத்தில் இருந்து 126 மீற்றர் வரை சிறியரக விமானங்கள் பறப்பதற்கு தடை ஏதுமில்லை என்பதால் இந்தத்திட்டம் தங்களது வியாபார வளர்ச்சிக்கு பயனுள்ளதாக அமையும் என டோமினோஸ் கருதுகிறது.

மின்னணு சக்தியில் இயங்கும் திசைகாட்டி, இடங்களை வரைபடத்தின் வாயிலாக புரிந்து கொள்ளும் ஜி.பி.எஸ். கருவி ஆகியவை இந்த ஆளில்லா விமானங்களில் பொருத்தப்பட்டுள்ளது. அதனால் தரையில் இருந்தபடியே ரிமோட் மூலம் இந்த விமானங்களை இயக்கி, குறுகிய நேரத்தில் பிட்சாக்களை விநியோகம் செய்யமுடியும்..


## அமெரிக்க உளவுத்துறைக்கு கூகுள் தகவல் தரவேண்டும்!




கூகுள் இணையத்தளத்தைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் குறித்து அமெரிக்க உளவுத்துறையான எஃப்.பி.ஐ (F.B.I.) கேட்கும் தகவல்களை அந்த நிறுவனம் தரவேண்டும் என்று சான் ப்ரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இணையத்தளசேவை வழங்குவோர், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்ட அமைப்புகளிடம் தகவல்களை கேட்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என கூகுள் சார்பில் முன் வைக்கப்பட்ட வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. 2001 செப்ரெம்பர் 11-ஆம் திகதி இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பின்னர், அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, அந்நாட்டு உளவுத்துறையின் தீவிரவாதத் தடுப்பு அதிகாரிகள் நீதிபதியின் ஒப்புதல் இல்லாமலேயே உத்தரவுகளைப் பிறப்பிக்க அதிகாரம் உள்ளது. இத்தீர்ப்பை எதிர்த்து கூகுள் நிறுவனம் மேல்முறையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைய இணைப்பு இன்றி மெயில்!



இணையத் தளம் மூலமாகவே பல நிறுவனத் தளங்கள், வாடிக்கையாளர்களுக்கு மின் அஞ்சல் வசதியைத் தந்து வருகின்றன. வெப் மெயில் எனப்படும் இணையத் தளத்திலேயே நம் அஞ்சல் பயன்பாட்டினைக் கொள்வது நமக்குப் பல வழிகளில் பயனைத் தருகிறது.

வெப் மெயிலை நாம் பெற, அது தரும் தளத்தினை இணையம் மூலமாகவே தான் அணுக முடியும். ஆனால், இப்போது, சில மாற்றங்கள் செய்து, இணைய இணைப்பு இல்லாத போதும் அணுகலாம்.

அது எப்படி சாத்தியமாகிறது என்பதனைக் காணலாம். ஜிமெயில் பயனாளர்கள், இதுவரை கூகுள் குரோம் பிரவுசர் பயன்படுத்தாதவராக இருந்தால், இந்த வசதியினைப் பெற குரோம் பிரவுசரைப் பயன்படுத்த வேண்டும். இதுவும் இலவசமே. பின், இந்த பிரவுசர் மூலம், குரோம் வெப் ஸ்டோரை அணுக வேண்டும். இங்கு Offline Google Mail app என்னும் புரோகிராமினைப் பெற வேண்டும். இதற்கு இந்த ஸ்டோர் தளத்தில் Add to Chrome என்னும் பட்டனில் கிளிக் செய்திட வேண்டும்.

தொடர்ந்து, நீல நிறத்தில் Offline Google Mail என்னும் பட்டன் Chrome's Apps என்பதன் கீழ் அமைககப்படும். (பிரவுசரில் புதிய டேப் ஒன்றினைத் திறந்து, கீழாக உள்ள Apps லிங்க்கில் கிளிக் செய்திடவும்.) இந்த ஐகனில் கிளிக் செய்து "Allow offline mail' என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். அதன்பின் Continue என்பதில் கிளிக் செய்திடவும். இதன் பின்னர், உங்கள் ஒன்லைன் ஜிமெயில் இன்பொக்ஸின் ஒரு கொப்பி உங்கள் கணனியில் ஏற்படுத்தப்படும்.

நீங்கள் மின் அஞ்சல் செய்தி ஒன்று அனுப்ப வேண்டும் எனில், இன்ரநெற் இணைப்பு இல்லாத போதும் "அனுப்பலாம்" நீங்கள் "அனுப்பிய" செய்திகள், இன்ரநெற் இணைப்புப் பெற்றவுடன் அனுப்பப்படும். இந்த Offline Google Mail ஏற்பாட்டினை உங்கள் சொந்த தனிப்பட்ட அல்லது லப்டொப் கணனியில் மட்டுமே ஏற்படுத்தவும். வேறு கணனி எனில் மற்றவர்கள் உங்கள் செய்திகளைக் காண நேரிடும். விண்டோஸ் லைவ் ஹொட் மெயில் மற்றும் யாஹூ மெயில் ஆகியவற்றிற்கும் இதே போன்று ஈமெயில் புரோகிராம் ஒன்றினை இன்ஸ்டோல் செய்திடலாம்.

## WiSee - மற்றுமொரு புரட்சி!




வைஃபை உபயோகத்தின் மூலம் இதுவரை பல்வேறு பலனை அடைந்தாலும் அது எல்லாம் கணனி மயம் அல்லது ஓட்டோமேஷன் டெக்னோலஜி மூலம் தான் கிடைத்து வந்தது. இந்நிலையில் இப்போது ஒரு புது டெக்னோலஜி வந்துள்ளது அது தான் "it ]P -WiSee" . இது என்ன? வைபை ரவூட்டர் சிக்னல் வீடு முழுவதும் நிறைந்திருக்கும் அதனை நம் சைகையின் மூலம் நாம் பார்க்க முடியாத விஷயங்களையும் கன்ட்ரோல் செய்ய முடியும். ஆச்சரியம் தான் ஆனால் சக்ஸஸ். அதாவது நம் பெட்ரூமில் படுத்திருப்போம் ஆனால் கீழே மின்விளக்கை அணைக்க மறந்திருப்போம் ∴ டிவி ஓடிக் கொண்டிருக்கும்- ரிமோட்டை தேடுவோம் வொல்யூமை குறைக்க அல்லது அணைக்க ∴ அல்லது நல்ல தூக்கம் வரும் நேரம் எழுந்து விளக்கை அணைக்க சோம்பேறித்தனம் ∴ அல்லது எழுந்து போய் வொல்யூமை குறைக்க சோம்பேறித்தனம்.

இப்படியான பலவிஷயங்களை சைகையின் மூலம் கட்டுப்படுத்த முடியும். இதை இப்போது நீங்கள் வீடியோவில் காணலாம். இதன் மூலம் மேலே இருந்து வீட்டின் கதவை ஓட்டோமட்டிக்காக திறக்க முடியும் மற்றும் பல விஷயங்களை கன்ட்ரோல் செய்யும் இந்த வை-ஸீ டெக்னோலஜியை வோஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# பாடசாலையின் விரைவான அபிவிருத்திக்கு மாணவர்களின் ஆதரவே காரணமாகிறது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயம் விரைவான முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த உதாரணம் என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய அரசின் நிதி உதவியுடன் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் 675 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாடசாலை வகுப்பறை கட்டடத் தொகுதியினை திறந்து வைக்கும் நிகழவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது எவ்வித வளங்களுமின்றி நம்பிக்கையுடன் மட்டும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று ஒரு குறுகிய காலத்தில் ஒரு நிறைவான பாடசாலையாக நிமிர்ந்து நிற்கிறது. இதற்கு இந்தச் சமூகம் குறிப்பாக பெற்றோர்கள் இந்தப்பாடசாலை மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் வழங்குகின்ற ஒத்துழைப்புமே காரணம். 119 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை குறுகிய காலத்தில் 617 மாணவர்களை கொண்டுள்ளது என்றால் அது இந்தப்பாடசாலையின் வளர்சசியையும் இந்தச் சமூகம் பாடசாலை மீது கொண்டிருக்கின்ற அக்கறையினையுமே வெளிப்படுத்துகிறது.

இப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றார்கள். சிறந்த தலைமைத்துவம் உள்ள அதிபர் ஒருவரை இந்தப் பாடசாலை பெற்றிருக்கிறது. அத்தோடு மாணவர்களும் தங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்ற உணர்வில பாடசாலை மீது அதிக அக்கறை கொண்டுள்ளனர். உயர் கல்விக்காக வேறு பாடசாலைக்கு சென்ற மாணவர் கூட இந்தப் பாடசாலையின் மீது கொண்டுள்ள அக்கறை பாராட்டத்தக்கது. எனவே இது போன்ற எல்லோரினதும் நம்பிக்கையும் முயற்சியும் ஒத்துழைப்புமே இந்தப் பாடசாலையை விரைவான முன்னேற்றத்தை நோக்கி கொண்டு சென்றுள்ளது. இந்த முன்னேற்றம் மேலும் முன்னோக்கிச்செல்ல வேண்டும். பல சாதனைகளை கல்வியில் ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வராசா, கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொணடனர்.

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 46 இலட்சத்துடன் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப்பகுதி இளைஞர் ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்பிவைப்பதாகக் கூறி 46 இலட்சத்து 8550 ரூபாவை மோசடி செய்த நபர் ஒருவர் தலைமறைவாகியிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

யாழ். நகரின் வங்கி ஒன்றின் ஊழியரான இவர் குறித்து இளைஞரை கனடா நாட்டிற்கு அனுப்பிவைப்பதாகக் கூறியே இந்தப் பண மோசடியைப்புரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் பாதிக்கப்பட்ட இளைஞரின் பெற்றோர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்யுள்ள நிலையில் தலைமறைவாகியிருக்கும் குறித்த மோசடி நபரை பொலிஸார் தேடிக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் யாழ். கிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். இதேவேளை யாழ். நகரில் கடந்த வாரம் இரண்டு இலட்சம் ரூபா காசோலை மோசடி சம்பவமொன்றும் யாழ். பொலிஸ நிலையத்தில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்த அவர் இந்தச் சம்பவத்திலும் மோசடி நபர் தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவித்தார். இவரைக்கைது செய்யவும் யாழ். பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

# அநாதரவாக கிடந்த மோட்டார் சைக்கிள்

## - கல்வியங்காட்டில் பரபரப்பு


(திருநெல்வேலி)

கல்வியங்காடு கலைமகள் வீதி, விநாயகர் வீதி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் இரண்டு மோட்டார் சைக் கிள்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

புதிய செம்மணி வீதி கலைமகள் வீதி முகப்பில் வீட்டு மதில் ஒன்றுடன் சரிந்த நிலையில் சிவப்பு நிறத்திலான மோட்டார் சைக்கிள் காணப்பட்டது. விநாயகர் வீதியில் கறுப்பு நிற மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்டிருந்தது.

கறுப்பு நிற சைக்கிள் கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் உள்ள எரி பொருள் நிரப்பு நிலையத்திலிருந்து இரவில் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இரவு பகல் சேவையில் உள்ள இந்நிலையத்தில் பணியாற்றும் பணியாளர் ஒருவருக்கு இது சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய சிவப்பு நிறத்திலான மோட்டார் சைக்கிளும் அவர் அண்மித்த இடமொன்றிலிருந்து இரவு நேரம் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் திறப்பு சைக்கிளிலேயே காணப்பட்டது. இது பற்றிக் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (137)



இந்து ஆலயங்கள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 'விஸ்வ இந்து பரிசத்' அமைப்பினால், நேற்று முன் தினம் அரச அதிபர் பணிமனையில் வைத்துக் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது. அமைப்பின் அங்கத்தவர்களான என்.பி. ஸ்ரீந்திரன், கந்தசத்தியதாசன், எஸ். வளர்மதி, போ.துஸ்யந்தன் ஆகியோர் இணைந்து அரச அதிபர் சார்பாக நிர்வாக உத்தியோகத்தர் கே.கருணாகரனிடம் மகஜரை கையளிப்பதைக்காணலாம். (06)

# பதிவிறக்கப் பெட்டகம்

**ரவிக்குமாரின் 'கண்காணிப்பின் அரசியல்' நூலிலிலிருந்து...**

இழப்பதற்குத் தன்னைத் தவிர ஏதுமற்றவனாய் இயற்கையின் முன் நின்றவனும், தனது உயிர்சிதை அச்சத்தின் காரணமாகவே குழுவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவனுமான மனிதன், தான் எதிர்கொள்ளும் பொருட்களைப் பற்றிய அறியாமை என்பது தனது இருப்பையே அச்சுறுத்துவதாக அமைவதால் பொருட்களுக்குப் பெயரிடுவதன் மூலம் அவற்றைத் தனது கட்டுக்குள் கொண்டுவந்தான். இதற்கு அவன் உருவாக்கிக்கொண்ட தொழில்நுட்பமே மொழி எனப்படுவதாகும். பொருளைக் கடந்துசெல்ல உதவுகிற மொழி என்கிற தொழிலநுட்பமே பொருளைப் பற்றிய அவனது அறிவாகவும், அதுவே பொருளின் மீதான அவனது ஆதிக்கமாகவும் அமைகிறது. ஒரு பொருளை பல்வேறு கோணம், காலம், தளங்களில் பல்வேறாக அறியப்படக் கூடிய சாத்தியத்தைக் கொண்டிருப்பதால் உண்மையில் ஒரு பொருளைப் பற்றிய அறிவு என்பது இவ்வாறு பல்வேறு நிலைகளில் அறியப்பட்டதன் தொகுபபாகவே அமைகிறது.

*** *** ***

திறமை பற்றிப் பேசுகிற குரல்கள் வெகுமக்களை திறமையற்ற முட்டாள்களாகவே கருதும். அவர்களுக்கு வாழ்வதற்குத் தகுதியில்லை என்பதே அவற்றின் தீர்ப்பாகவும் இருக்கும். திறமைசாலிகளைத் தலைவர்களாக, வழிகாட்டுபவர்களாக வைத்துக் கொண்டாட வேண்டியதுதான் மற்றவர்களது வேலை என்று நிர்ணயிக்கும். அதிலும் குறிப்பாக சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களை முட்டாள்களாக, அசுத்தமானவர்களாக, ஏமாற்றுக்காரர்களாக, குற்றவாளிகளாக சித்தரித்துக் காட்டும்.

*** *** ***

இலக்கின்றி ஏவப்படும் வன்முறைக்கு அப்பாவிகள் பலியாகும்போது பொது அமைதி கெட்டுவிட்டதென்ற அபிப்பிராயம் மக்களுக்கு ஏற்படுகின்றது. இதன் விளைவாக உண்டாகும பாதுகாப்பற்ற உணர்வு அரசு அதிகாரத்தை மென்மேலும் சார்ந்திருக்கும் நிலைக்கு அவர்களைத் துரத்துகிறது. நம்மைப் பொலீசும் இராணுவமும் காப்பாற்ற வேண்டுமென நாம் கூக்குரலெழுப்புகிறோம். ஆக, இலக்கற்று வன்முறையை ஏவும் பயங்கரவாதச் செயல்கள் அரசின் வலிமையைக் குறைப்பதில்லை. மாறாக அதை அதிகப்படுத்தவே உதவுகினறன. அரசு மேலும் மேலும் தனது ஒடுக்குமுறை நிறுவனங்களைப் பலப்படுத்திக் கொள்வதை அவை ஊக்குவிக்கின்றன. அதிகாரங்கள் மையத்தில் குவிக்கப்படுவதை, 'வலிமையான அரசின்' தேவையை முன்னிறுத்தி வரவேற்கும்படி செய்துவிடுகின்றன. அரசு உறுதியாக இருக்க வேண்டும். அது நம்மைத் திறம்பட அடக்கியாள வேண்டுமென்று நாமே விரும்பிக் கேட்கிற நிலைக்கு ஆளாக்கப்படுகின்றோம். பாதுகாப்பு என்பதன் பெயரில் அடக்குமுறைக்குக் கையேந்தும் நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். உயிரைப் பற்றிய அச்சத்தின் காரணமாக ஒடுக்குமுறையை விரும்பி ஏற்கும் இத்தகைய மனோநிலைதான் பாசிசத்தின் அடித்தளமாக இருக்கிறது. இது பொதுப்புத்தியைத் (Commonsense) தீர்மானிப்பதாக ஆகிவிடும் பட்சத்தில் அங்கு பாசிசம் எளிதில் வெற்றியடைந்து விடுகிறது.

*** *** ***

தினந்தோறும் பத்திரிகைகளில் உளவாளி கொலை, காட்டிக்கொடுத்தவர் வெட்டிக்கொலை, கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு எனப் பல்வேறு விதமாகத் தகவல்கள் நமக்குள் சேகரமாகின்றன. இப்படி நடந்துகொள்ள 'இனத்தின் விடுதலை' என்ற கருத்து அவர்களுக்கு அனுமதி வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் குரூரங்களுடன் உடநிகழ்வாக சீருடையும், துப்பாக்கிகளும், அணிவகுப்பும் குறியீடுகளாக நின்று நமக்கு நினைவுபடுத்துகின்றன. இவற்றை எதிர்த்தால் மரணம் என்பது உணர்த்தப்படுகிறது. கேள்வி கேட்டு சாவதை விடவும் மௌனமாக இருந்து உயிர் வாழ்வதே புத்திசாலித்தனம் என்ற மதிப்பீட்டினிடையில் நாம் வாழ்கிறோம். சீருடையினர் நம்மைக் காப்பதற்காகப் புறப்பட்டவர்கள்; இந்த அதிகாரம் நமக்கானது; அவர்களின் தண்டனைகள் எல்லாம் நம் விடுதலைக்கானவை என்ற நம்பிக்கைகளில் அமிழ்ந்து கிடக்கிறோம். அச்சம் மண்டிய நமது மனம் அதிகாரத்தின் வரையறைகளை விதிமுறைகளை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்கிறது. யாரும் ஒருவரை அடித்துக் கொன்றுவிட்டு 'அவன் துரோகி' என்று சொல்வதே போதுமானதாக இருக்கிறது. துரோகியைக் கொல்லலாம்; விபசசாரியை பாலியல் பலாத்காரம் செய்யலாம் என்பதையெல்லாம் நமக்குள் உறைந்து கிடக்கும் ஒழுக்க மதிப்பீடு கள் ஒப்புக் கொள்கின்றன.

# பொருளாதார அபிவிருத்தியே நல்லிணக்கத்தை உருவாக்கும்



(வவுனியா)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொருளாதார அபிவிருத்தி மிகவும் முக்கியமானது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு சக்திகள் இலங்கை விவகாரங்களில் தேவையின்றி தலையீடு செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கில் இயங்கிய சில சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணியதாகத் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தை தடுத்து நிறுத்த சில ஐரோப்பிய நாடுகள் பல தடவைகள் முயற்சி மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படா விட்டால் மட்டுமே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# சமூக சேவைகள் அமைச்சினால் வவுனியாவில் தொழில் சந்தை

(வவுனியா)

சமூக சேவைகள் அமைச்சால் மாற்று வலுவுள்ளோருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கான சந்தை எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது. இது வட மாகாணத்திற்கான தொழில் சந்தையாக அமையவுள்ளது.

இதற்காக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுள்ளோரில் தொழில் வாய்ப்பு தேடுவோருக்கு படிவங்கள் வழங்கும் பணியை அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் பேரில் பிரதேச செயலர்கள் ஊடாக வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகங்களில உள்ள சமூக சேவைகள் அதிகாரிகள் மூலமாகவோ அல்லது மாற்று வலுள்ளோர் தமது பிரிவின் கிராம அலுவலர் மூலமாகவோ பெற்று பூரணப்படுத்தி வழங்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியிலமைந்த இந்தப் படிவத்தை பூரணப்படுத்தி தமக்கு விருப்பமான தொழில் வாய்ப்பைக் குறிப்பிட்டு வழங்க முடியும்.

சமூக சேவைகள் அமைச்சு மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக செய்து வரும் உயரிய அக்கறையின் வெளிப்பாடாக இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. (160)

# மீட்புப் பணிக்கு உதவாமல் பின்வாங்கியது ஏன்?

## சஜின் வாஸ் விளக்கம்

(கொழும்பு)

என்னுடைய பிரத்தியே ஹெலிகொப்டர் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்துமளவுக்கு வசதியானது அல்ல என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் குற்றச்சாட்டினை மறுதலித்தே மேற்கண்டவாறு சஜின் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக பலப்பிட்டி கடலில் காணாமறபோன மீனவர்களை மீட்பதற்கு என்னுடைய ஹெலிகொப்டரை வழங்கவில்லை என விஜயதாஸ சுயமாக குற்றம் சாட்டியிருந்தார். இதனை நான் வன்மையாக மறுக்கின்றேன்.

மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஹெலிகொப்டருக்கு பல வசதிகள் இருக்கவேண்டும் இரண்டு என்ஜின் உள்ள பிரமாண்ட ஹெலிகளினால்தான் சுழல் காற்று வேளையிலும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அத்தகைய வசதி என்னுடைய ஹெலிகொப்டரில் இல்லை. இது சாதாரண, சிவில் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்துடன் உள்ள ஹெலி என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையில் மீட்பு நடிவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளையுடைய ஹெலிகொப்டர் இலங்கை விமானப்படையிடம்தான் இருக்கிறது. நான் வைத்திருப்பது போன்ற ஹெலிகொப்டரினால் கடுமையான காலநிலையில் வானில் பறக்கமுடியாது என்று குறிப்பிட்டார்.

## பூநகரியில் சந்தைத் தொகுதி நிர்மாண கொடுப்பனவு வழங்க தாமதம் ஏன்

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவல் 17 இலட்சம் ரூபா செலவில் இருசந்தைத் தொகுதிகளை அமைத்து சேவைகள் முடிவு செய்யப்பட்டு ஆறுமாதங்களாகியும் தமது ஒப்பந்த வேலை செய்த பணத்தை வழங்குவதில் அசமந்தப் போக்கை பூநகரிப் பிரதேச சபை நிர்வாகம் கடைப் பிடிப்பதாக அப் பகுதி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் முறையிட்டுள்ளனர்.

தமக்கு வேலை நடைபெறும் போது பகுதிக்கொடுப்பனவு தரப்படுமென வாங்குறுதி வழங்கப்பட்டும் இவ்வொப்பந்தப் பணம் வழங்காமல் இழுத்தடிக்கப்படுவதால் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (112)

# வவுனியாவில் மாற்றுவலுவுள்ளோருக்கு அடையாள அட்டை வழங்கத் திட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் மாற்று வலுவுள்ளோருக்கான நலன்புரி அடையாள அட்டைகளை வழங்கு வதற்கான வேலைத்திட்டம் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட உள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மாற்று வலுவுள்ளோர் அனைவரும் பதிவிற்கு உட்படுத்தப்பட்டனர். இதற்காக 4 பக்க படிவங்கள் உபயோகிக்கப்பட்டன. அந்த விபரங்கள் யாவும் கணனி மயப்படுத்தப் பட்டு வைர வப்புளியங்குளத்திலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திலும், பிரதேச செயலகங்களிலும், மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகத்திலும் பேணப் பட்டு வருகிறது.

இந்த விபரங் களிலுள்ளோரையும், புதிதாக இனங்காணப்படுபவர்களையும் புகைப்படம் எடுத்து சமூக நலன்புரி அட்டைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சமூக சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலைப் பெற்று பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் இவ் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி செ.சிறிநிவாசன் எடுத்துள்ளார்.

இதன்படி வவுனியா நகரம், வவுனியா தெற்கு , வெங்கலச் செட்டிகுளம், நெடுங்கேணி ஆகிய 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இவ்வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான முன் ஆயத்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ் வேலைத்திட்டம் 2012 ஆம்

# பணிப்பெண் மீது சித்திரவதை மீட்டெடுக்க கோரிக்கை

(வவுனியா)

வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதி அரேபியாவுக்குச் சென்று அங்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கும் தமது மகளை மீட்டுத் தருமாறு கோரி பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய ஏறாவூர் நகர முதல்வருமான அலிஸாஹிர் மௌலானாவிடம் முறையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, வாகரை ஐம்பது



வீட்டுத் திட்டக் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த , தேவராசா பானுமதி என்ற பெண்ணே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பெண்ணின் பெற்றோர் ஏறாவூர் நகர முதல்வரிடம் நேற்றுமுன்தினம் முறையிட்டுள்ளனர்.

அம்முறைப்பாட்டில், சென்ற வருடம் ஒக்ரோபர் மாதம் வாகரையிலிருந்து வீட்டுப் பணிப்பெண் வேலைக்காக சவூதி நோக்கிப் புறப்பட்ட தமது மகள் அடி, உதை, கொதிநீரை உடம்பில் ஊற்றுதல் உட்பட்டப் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் பணிபுரிந்த காலத்தில் எதுவிதமான ஊதியமும் வழங்கப்படவில்லை.

கடைசியாக இவ்வருடம் பெப்ரவரி மாதம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தான் கொதி நீரால் சித்திரவதைக்கு உட்பட்டுள்ளதாகவும் தன்னை எப்படியாவது இந்த வீட்டின் சித்திரவதைகளிலிருந்து காப்பாற்றுமாறும் கூறினார்.

அதன் பின்னர் அவருடனான தொடர்புகளும் அறுந்து போய் விட்டன. இந்த விடயம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறையிட்டும் இது வரை அவர்கள் நம்பிக்கை தரக் கூடிய பதில் எதுவும் தரவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சவுதி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக ஏறாவூர் நகர முதல்வர் அலிஸாஹிர் மௌலானா இதன் போது குறித்த பெற்றோருக்கு உறுதியளித்துள்ளார்.

## சிறுவர் நிதிக்காக மாயாஜால விளையாட்டு

(வவுனியா)

கடந்த காலங்களில்" பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்களை கவனிக்கும் வகையில் மாயாஜால விளையாட்டு நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

வவுனியா சிறி அகிலாண்டேஸ்வரி அருளகத்தின் ஆதரவற்ற சிறுவர்களின் இல்ல நிதிக்காக நடத்தப்படும் இந்த மாயாஜால விளையாட்டு நிகழ்வு இன்று வவுனியா நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் அண்மையில் இடம்பெற்ற சமூகவிஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களின் விபரம் வருமாறு,

(201-500 மாணவர் வகை பாடசாடலை

தரம் - 6

ஜே.ஜெகதீஸ்வரி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி),ரி.ஜதுகோபன் (மிருசுவில் ஜி.ரி.எம்.எஸ்), எஸ். சுகர்னா (விடத்தல்பளை கமலாசனி வித்தி), பி.பவிதன் (கச்சாய் ஜி.ரி.எம்.எஸ்)

தரம் 7

பி.பவினயா (மட்டுவில் சந்திர மௌலீசவித்தி ),ஜே. கோபிசன் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி), வி.பிரியங்கா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி),

தரம் 8

ரி.ஜீவிதா(மிருசுவில் ஜி.ரி.எம்.எஸ்),கே.தர்சனர் (மட்டுவில் கமலாசனி வித்தி),

501-1000 மாணவர் வகை பாடசாலை

தரம் 6

எஸ்.துலன்சாளி,எஸ்.சுலக்சிகா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), யூ.சிந்துஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி),

தரம் 7

ரி.அசோகன் கே.கவினா(மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), எஸ். சஜீபன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தரம் 8

எஸ்.கஜிகரன், எஸ்.யாதவன்(மீசாலை வீரசிங்கம் மத்திய கல் லூரி),வி.பானுஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி),

தரம் 9

யூ. சுலக்ஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி),கே.கவிப்பிரியா,பி.சங்கீதன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி),

தரம் 10

ரி.பாசுபதன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ,எஸ்.கிருசாயினி (வரணி மகா வித்தி),எஸ்.யதுர்ஷா(மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

தரம் 11

வி.தினுஜா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ரி.கிருஷாந்தினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பி.சர்மிளா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி),

தரம் 12-13

என். கேதுசா,என்,கோபினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி), ரி.கஜந்தினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி). (தொடரும்...)

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## உயிரியல்



ஆசிரியர்: கஜேந்திரன்

10. பின்வருவனவற்றுள் எது காற்றின்றிய சுவாசத்தின் போது தோற்றுவிக்கப்படுவதில்லை?

(1) எதையில் அற்ககோல் (2) இலற்றிக் அமிலம் (3) அசற்றிக் அமிலம் (4) அசற்றல்டிகைட்டு (5) காபனீர்ரொக்சைட்டு

11. ஒடுக்கற்பிரிவு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது** எது?
(1) இதனது இரண்டாவது பிரிவு இழையுருப்பிரிவை ஒத்தது.
(2) இது இருமடியமான கலங்களில் மட்டுமே நிகழும்.
(3) முதலாவது பிரிவின் முன் அவத்தையில் காணப்பட்ட கோப்பு முதலாவது பிரிவின் அனுஅவத்தையிலும் தொடர்ந்து காணப்படும்.
(4) இதன் விளைவாக தாய்க்கலத்தின் பிறப்புரிமை அமைப்பில் இருந்து முற்றிலும் வேறுப்பட்ட 04 மகட்கலங்கள் பெறப்படும்.
(5) இதன் முன்அவத்தை-1 இலும்,முன் அவத்தை-2 நிகழுவதற்கு ஒப்பீட்டளவில் நீண்ட நேரம் . தேவைப்படும்.

12. பின்வரும் எந்த ஒரு பாதை / பாதைகளின் ஊடாக, நீர் அசையும் போது கலச்சுவரினை கடப்பதில்லை?

(1) சிம்பிளாஸ்ட் பாதை
(2) அப்போபிளாஸ்ட் பாதை
(3) புன்வெற்றிடப்பாதை
(4) சிம்பிளாஸ்ட் பாதை, புன்வெற்றிடப்பாதை
(5) அப்போபிளாஸ்ட், சிம்பிளாஸ்ட், புன்வெற்றிடப்பாதை

13. மனிதனின் சுவாசத்தொகுதி தொடர்பான பின்வரும் கூற்றக்களுள் சரி யானது,

(1) தொண்டையை படலிட்டுள்ள மேலணிக்கலங்கள் சில சீதம் சுரக்கும் கலங்களைக் கொண்டது.
(2) சுவாசப்பை சிறுகுழாய்கள்,எளிய தனிச்செவ்வகத்திண்ம மேலணியால் நுதிக்கப்பட்டிருக்கும்.
(3) சுவாசப்பை சிறுகுழாய்களில் வளையவுருவான கசியிழையங்கள் காணப்படும்.
(4) நுரையீரலுக்கும்,குருதிக்கும் இடையிலான வாயுப்பரிமாற்றம் சிற்றறையூடாக மாத்திரமே நிகழும்.
(5) வலது நுரையீரல் இரண்டு சோணைகளாகவும்,இடது நுரையீரல் மூன்று சோணைகளாகவும் . பிரிக்கப்பட்டு காணப்படும்.

14. மனித உடலில் தனித்தறன் உடைய நீர்ப்பீடணத்துடன் தொடர்பான கலம்,
(1) நடுநிலைநாடி (2) மூலநாடி
(3) நிணநீர்க்குழியம் (4) செங்குழியம்
(5) இயோசிநாடி

15. மனிதவுடலில் உள்ள நொதியங்களிற் பெரும்பாலானவை நடுநிலையான pH பெறுமானத்தை அனுகிய நிலைமைகளிலேயே தொழிற்படுகின்றன. கீழக்காணும் நொதியங்களுள் எது இக்கூற்றுக்கு விலக்காகும்?
(1) Amylase (2) Pepsin (3) Trypsin (4) Lipase
(5) Maltase

16. பாரம்பரியம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது**,
(1) பாரம்பரியத்தின் நிறமூர்த்த கொள்கையினை சட்டன்,போவரி என்ற விஞ்ஞானிகள் வெளியிட்டனர்.
(2) பெரும்பாலான விகாரங்கள் பின்னடைவானதாக காணப்படும் அதேவேளை அவை பல்லின நுகநிலையில் மட்டுமே வெளிக்காட்டப்படும்.
(3) சில விகாரங்கள் ஆட்சியானவையாகவும்,நன்மைபயக்க கூடியவையாகவும் காணப்படும்.
(4) மேலாட்சியின் போது வெளிக்காட்டப்படும் இயல்பு, ஒரு பரம்பரையலகின் தொழிற்பாட்டை மற்றைய பரம்பரையலகு நிரப்புவதனால் வெளிக்காட்டப்படும்.
(5) பல்சந்ததிச்சுவட்டில் பரம்பரையலகுகளின் எதிருருக்கள்,சுயாதீனமாக தனிப்படுத்துகை அடையும்.

17. துணைவளர்ச்சி முற்றுப்பெற்ற ஒரு இருவித்திலைத்தாவரத்தில் காணப்படும் ஆண்டு வளையங்கள் எதனால் ஆக்கப்பட்டிருக்கும்?

(1) துணைக்காழ் (2) முதல்க்காழ்
(3) துணை உரியம் (4) முதலுரியம்
(5) கலன் இழையம்

18. வட்டவடுக்கற்ற ஒளிப்பொசுபோரிலேற்றத்தில் நீர் மூலக்கூறுகள் பகுக்கப்பட்டு ஒட்சிசன் வெளியேற்றப் படுவதுடன், ஐதரசன் அயனானது ஒரு வாங்கி மூலக்கூறு ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இவ் வாங்கி மூலக்கூறாவது,
(1) FAD (2) NAD (3) NADP
(4) PEP (5) RUBP

1. C,H,O,N ஆகிய மூலகங்களை மாத்திரம் கொண்ட சேர்வையினைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) மோல்றோசு (2) கைற்றின் (3) ஈமோகுளோபின்
(4) டீ ஒக்சி றைபோசு வெல்லம் (5) RNA

2. பின்வரும் இயல்புகளுள் விலங்கு இராட்சியத்தில் அடங்கும் அங்கிகளுக்கு பொருத்தமற்ற இயல்பு,

(1) ஒழுங்கையும் ஒழுங்கமைப்பையும் கொண்டிருத்தல்.
(2) இனப்பெருக்கத்தினை மேற்கொள்ளுதல்.
(3) கலச்சுவருடைய கலங்களைக் கொண்டிருத்தல்.
(4) குறித்த சூழலுக்காக இசைவாக்கம் அடைந்திருத்தல்.
(5) வளர்ச்சியும் விருத்தியும் காணப்படுதல்.

3. இயுக்கரியோட்டா கலம் ஒன்றில் DNA உடன் Histone வகைப் புரதங்களையும் கொண்ட புன்னங்கங்களின் சேர்வு,

(1) இறைபோசோம், கரு, இழைமணிகள் மாத்திரம்.
(2) இழைமணிகள், பச்சையவுருமணிகள் மாத்திரம்.
(3) இழைமணிகள் மாத்திரம்.
(4) கரு மாத்திரம்.
(5) புன்மையத்தி, கரு மாத்திரம்.

4. அதிகூடிய வியத்தமடைந்த புணரித்தாவரத்தை கொண்ட தாவரம்/ தாவரக்கூட்டம் பின்வருவனவற்றுள் எது?

(1) *Marchantia* (2) *Nephrolepis* (3) Lycopyta

(4) *Pinus* (5) *Musa*

5. விலங்கு இழையங்களில்,அயற்கலங்களுக்கு இடையே பதார்த்தங்களை யும்,சமிஞ்கைகளையும் கடத்துவதற்காக காணப்படும் பௌதீக கட்டமைப்பு பின்வருவனவற்றுள் எது?

(1) தொடர்பு படுத்தும் சந்தி (2) நெருக்கமான சந்தி
(3) முதலுரு இணைப்பு (4) தாங்கும் சந்தி
(5) குழியவுருச்சந்தி

6. பின்வருவனவற்றுள் ஒரு மூல் சேர்வையின் ஓட்சியேற்றத்தின் போது,அதிகளவு சக்தியினை விடுவிக்கும் சேதனச்சேர்வை பின்வருவனவற்றுள் எது?

(1) புரதம் (2) மாப்பொருள் (3) றைபோசு
(4) கொழுப்பு (5) நீர்

7. ATP தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது**,
(1) ATP தாக்கங்களிடையே சக்தியைக்காவும் மூலக்கூறுகளாக தொழிற்படும்.
(2) ATP ஓர் உயிர்ப்பல்பகுதியத்தை ஆக்கும் நீயுக்கிளியோரைட்டு ஆகும்.
(3) இவை அசையும் தகவுடையன.
(4) இது இரண்டு உயர்சக்திப்பிணைப்புக்களை கொண்டது.
(5) ATP விரைவாக சக்தியை வெளிவிட்டு விரைவாக மீளத் தோற்றிவிக்கப் படும்.

8. நொதியத் தொழிற்பாடு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது**,
(1) போட்டிக்குரிய நிரோதிகள்,நொதியத்தின் உயிர்ப்பு மையத்துடன் பிணைப்படைவதன் மூலம் நொதியத் தொழிற்பாட்டை நிரோதிக்கும்.
(2) சில நொதியங்களுக்கு,குறித்த pH,சிறப்பு pH ஆக காணப்படலாம்.
(3) நொதியத்தொழிற்பாடு,பூட்டுத்திறப்பு பொறிமுறை மூலம் முதலில் எடுத்து விளக்கப்பட்டது.
(4) போட்டியற்ற நிரோதிகள்,நொதியத்தின் உயிர்ப்பு மையம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுடன் பிணைப்படைவதன் மூலம் நொதியத் தொழிற்பாட்டை ஊக்குவிக்கும்.
(5) நொதியத்தொழிற்பாடு,புரதங்களின் முப்பரிமான கட்டமைப்பில் தங்கியுள்ளது.

9. பெரும்பாலான பச்சையயுருமணிகளின் மணியுருக்களில் நடைபெறுவது பின்வருவனவற்றுள் எது?
(1) நீரின் ஒளித்திருப்ப ஒழுங்கு (2) PGA உருவாகுதல்
(3) மாப்பொருளின் தொகுப்பு (4) RUBP உருவாகுதல்.
(5) காபனீர்ரொக்சைட்டு பதித்தல்

19. யால தேசிய பூங்காவில்,2009 ஆம் ஆண்டில் யானைகளின் கூட்டம் என்பது, ஒரு
(1) குடித்தொகை ஆகும். (2) சாகியம் ஆகும்.
(3) சூழற்தொகுதி ஆகும். (4) உயிர்க்கோளம் ஆகும்.
(5) தனியன் ஆகும்.

20. மனிதனின் பற்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது,**
(1) மனிதனில் காணப்படும் பற்கள் பல்லினப்பற்களாகும்.
(2) மனிதனின் பாற்பற்கள் ஆறாம் மாதமளவில் தோன்ற ஆரம்பிக்கும்.
(3) பாற்பற்களில் முன்கடவாய்ப்பற்கள் காணப்படுவதில்லை.
(4) மனிதனின்,மேற்தாடையிலும் பார்க்க கீழ்த்தாடையில் ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையான பற்கள் காணப்படுகின்றன.
(5) மனிதனின் பாற்பற்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

21. மனித ஈரல் தொடர்பாக பின்வருவனவற்றுள் **தவறான கூற்று,**
(1) அது உடலின் மிகப்பெரிய சுரப்பியாகும்.
(2) இதனை மனித உடலின் குருதி வங்கி எனக்கருதலாம்.
(3) இதிலிருந்து பித்தம் சுரக்கப்படுதல் கோலியோசிஸ்ரோகைனின் இனால் தூண்டப்படுகின்றது.
4) அது வெப்பநிலைச்சீராக்கலுடன் சம்பந்தப்படுகின்றது.
(5) இது இரசாயன சமிபாட்டுத்தொழில் எதுவும் புரிவதில்லை.

22. மனிதனில் குருதிக்குளுக்கோசு மட்ட சீராக்கம் தொடர்பாக இன்சுலின் ஓமோனின் செயற்பாடுகளுள் பொருத்தமானது,
(1) குளுக்கோசின் காற்றுச்சுவாசத்தை அதிகரிப்பதன் மூலம் குருதிக்குளுக்கோ்சு மட்டத்தை அதிகரிக்கும்.
(2) குளுக்கோசினை குளுக்கோகான் ஆக மாற்றுவதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை . குறைக்கும்.
(3) கிளைக்கோஜினை தோற்றுவிப்பதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை அதிகரிக்கும்.
(4) கலங்களில் குளுக்கோசின் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் குருதிக்குளுக்கோசு மட்டத்தை அதிகரிக்கும்.
(5) குளுக்கோசினை கிளைக்கோசனாக மாற்றி தசை,ஈரற்கலங்களில் சேமிப்பதன் மூலம் . குருதிக்குளுக்கோசு மட்டத்தை குறைக்கும்.

$Cu^{2+} MnO_4^{2-} MoO_4^{2-} NO_3^{-} O^{2-}$23.

23. அன்னயன்களாக மாத்திரம் தாவரங்களி னால் அகத்துறுஞ்சப்படும் பிரதான மூலகமும் அது அகத்துறுஞ்சப்படும் வடி வமும் முறையே,
(1) செப்பு- (2) மங்கனீஸ்
(3) மொலிப்தனம் (4) நைதரசன் (5) ஒட்சிசன்

24. சுகதேகியான மனிதன் ஒருவரின் சிறுநீரகம் பற்றிய பின்வரும் கூற்றுக் களில் **பொய்யானது** எது ?
(1) இங்கு நடைபெறும் சிறுநீராகச்செயன்முறையில் பௌதீகச்செயன் முறைகளும் சம்பந்தப்பட்டுள்ளன.
(2) இது வயிற்றறைக்குழியில் உள்ள ஏனைய அங்கங்களைவிட கூடுதலான குருதியைப் பெறும்.
(3) இது Renin இனையும், Angiotensinogen இனையும் சுரப்பதன் மூலம் அகஞ்சுரப்பியாகவும் . தொழிற்படுகின்றது.
(4) சிறுநீரகத்திகளைக் கொண்டிருப்பதனால் குருதிக்குளுக்கோசு மட்ட சீராக்கத்தில் பங்குபற்றும்.
(5) இதன் அடிப்படை தொழிற்பாட்டு அலகாக சிறுநீரகத்தி காணப்படும்.

25. மனிதனின் முள்ளந்தண்டு,
(1) சிறுசாவிகளினதும் விலாஎன்புகளினதும் மூட்டுக்கும், தசைகளின் இணைப்புக்கும் மேற்பரப்பை . வழங்குகின்றது.
(2) 33 என்புகளை கொண்டிருக்கும் அதேவேளை அவற்றுள் 26 அசையத்தக்கவை.
(3) அதனுள் இருக்கும் செவ்வென்பு மச்சையில் வாழ்நாள் முழுவதும் செங்குருதிச்சிறுதுணிக்கைகளை . உற்பத்தி செய்கின்றது.
(4) நான்கு விற்களைக்கொண்டிருக்கும் அதேவேளை அவற்றுள் மூன்று விற்கள் துணை விற்களாகும்.
(5) அதிர்ச்சிகளை அகத்துறுஞ்சுவதற்கு கசியிழையப்பதார்த்தங்களினாலும், ஊன்பசைப் . பதார்த்தங்களினாலுமான முள்ளந்தண்டென்பிடை வட்டத்தட்டுக்களை கொண்டுள்ளது.

26. மனித ஆணின் விந்தானது சூலை நோக்கி அசைவதற்கான சக்தியை பெறுவதற்காக காணப்படும் விந்தின் பகுதியும், அதில் பெருமளவு காணப படும் தலப்புன்னங்கமும், முறையே,
(1) இழைமணி, நடுத்துண்டு
(2) கழுத்து, இழைமணி
(3) நடுத்துண்டு, இழைமணி
(4) அச்சிழை, இழைமணி
(5) இழைமணி, அச்சிழை

27. சுகதேகியான மனித ஆணின் சுக்கிலப்பாயம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் **தவறானது,**
(1) இது விற்றமின்-C யினைக் கொண்டது.
(2) இதன் pH 7.4-8.4 ஆகும்.
(3) இதன் பெரும் பகுதியினை ஆக்குவது,சுக்கிலப்புடகத்தின் சுரப்புக்களாகும்:
(4) இது விந்துக்கள் அசைவதற்கான சக்தியை வழங்க பிரக்ரோசு இனைக் கொண்டது.
(5) இது விதைமேற்றிணிவின் சுரப்புக்களையும்,சுக்கிலப்புடகச்சுரப்புக்களையும்,முன்னிற்கும்சுரப்பியின் . சுரப்புக்களையும் மட்டும் கொண்டது.

28. மனித குருதியமுக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் **தவறானது** எது?
(1) ஓய்வில் இருக்கும் சாதாரண உடல் நலமுள்ள வ்யதுவந்தவரின் குருதியமுக்கம் 120/80 mmHg . ஆகும்.
(2) நாடிகளின் சுவர்களில் கொழுப்புப்படிவதனால் உயர் குருதியமுக்கம் உண்டாகலாம்.
(3) குருதியமுக்கம் நாடி,நாளச்சுவர்களின் மீள்சக்திதன்மையில் சார்ந்திருக்கின்றது.
(4) பரிவு நரம்பு அசற்றைல்கோலின் எனும் நரம்புச்செலுத்தியினை செலுத்துவதன் மூலம் . குருதியமுக்கத்தை அதிகரிக்கும்.
(5) ஒரு நபரின் குருதியமுக்கம் அந்நபரின் தொழிற்பாட்டு நிலையிலும் தங்கியிருக்கும்.

29. கருக்கட்டப்பட்ட சூல் ,கருப்பையில் பதிக்கப்படும் நிலை,
(1) முசுவுரு (2) நுகம்
(3) அரும்பர்சிறைப்பை (4) முதிர்மூலவுரு
(5) முதிர்வுவழிக்கரு

30. மானிடத்தனித்திறன் உள்ள ஆளுமையான செயற்பாடுகளை கட்டுப் படுத்துவதற்காக மனித மூளையில் அமைந்த பகுதி,
(1) நுதற்சோணை (2) மூளி
(3) நீள்வளையமையவிழையம் (4) கடைநுதற்சோணை
(5) சுவர்ச்சோணை

31. DNA மீளச்சேர்க்கை தொழில்நுட்பத்தில் Plasmid இனைப்பயன்படுத்தும் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
(A) Endonuclease நொதியத்தினை பயன்படுத்தல்
(B) DNA Ligase இனைப்பயன்படுத்தல்
(C) பற்றீரியாவில் இருந்து Plasmid இனை வெளியே எடுத்தல்.
(D) Plasmid இனை பற்றீரியாவினுள் புகுத்தல்.
மேல் உள்ள படிமுறைகளின் சரியான தொடர் ஒழுங்கை தருவது,
(1) C,A,B,D (2) C,A,D,B (3) A,C,D,B (4) C,B,A,D
(5) D,B,A,C

32. தக்காளித்தாவரத்தில்,வட்டவடிவ பழங்கள்(**R**) நீள்வட்டவடிவ பழங்களுக்கு (**r**) ஆட்சி.அழுத்தமான வித்து (**L**) ,அழுத்தமற்ற வித்துக்கு (**l**) ஆட்சி. இரண்டு இயல்புகளும் பல்லினநுகம் உடைய தக்காளித்தாவரம் சோதனைக்கலப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இதன் போது கிடைத்த எச்சங்கள் முறையே,
. – வட்டவடிவ பழமும், அழுத்தமான வித்தும் கொண்ட தாவரங்கள்- 40
. – வட்டவடிவ பழமும் அழுத்தமற்ற வித்தும் கொண்ட தாவரங்கள்- 10
. – நீள்வட்டவடிவ பழமும், அழுத்தமற்ற வித்தும் கொண்ட தாவரங்கள்- 40
. – நீள்வட்டவடிவ பழமும், அழுத்தமான வித்தும் கொண்ட தாவரங்கள்- 10
**R,L** ஆகிய பரம்பரையலகுகளின் இடைவெளி படஅலகுகளில்,
(1) 20 (2) 10 (3) 40 (4) 80
(5) 50

33. தாவர இனப்பெருக்கம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
(1) அரும்பொட்டுதலின்போது எப்போதும் ஒட்டுக்கட்டையும் ஒட்டுமுளையும் ஒரே இனத்தை சார்ந்தவையாக . இருக்க வேண்டும்.
(2) தாவரங்களை பதியமுறையில் இனப்பெருக்கும் முறை களில், இலங்கையில் பிரதானமாக இடம்மாறிப் . பிறந்த அரும்புகள் முறை பயன்படுத்தப்படும்.
(3) ஒரு தாவரத்தின் கக்கவரும்பை இன்னோர் வேருள்ள தாவரத்துக்கு மாற்றி நடுதல் தண்டொட்டுதல் . ஆகும்
(4) பாரம்பரியரீதியில் மாற்றியமைக்கப்பட்ட தாவரங்களை இழையவளர்ப்பு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
(5) உயர்தாவரங்களில் பதியமுறை இனப்பெருக்கம்,மிகச்சாதரனமான இலிங்கமில் முறை இனப்பெருக்கம் . ஆகும்.

34. மனிதனில் பிரசாரணச்சீராக்கத்தில் பங்கேற்கும் பிரதான அங்கமும், ஓமோன்களும் முறையே,
(1) சிறுநீரகம் - ADH, Aldestrone
(2) இதயம் - ADH, Oxytocin
(3) சிறுநீரகம் - ADH
(4) ஈரல் - ADH, Insulin
(5) சிறுநீரகம் - Aldestrone

35. மனிதனின் நரம்புத்தொகுதி பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
(1) சுற்றயல் நரம்புத்தொகுதியில் உள்ள நரம்புகள் யாவும் கலப்பு நரம்புகளாகும்.
(2) பரபரிவு நரம்புகள் முண்ணானில் இருந்தும் மூளையத்தில் இருந்தும் தோற்றுவிக்கப்படும்.
(3) சுற்றயல் நரம்புத்தொகுதி 33சோடி முண்ணான் நரம்புகளையும் 12 சோடி மண்டையோட்டு . நரம்புகளையும் கொண்டது.
(4) பரிவு நரம்புகள் முண்ணானில் இருந்து மட்டுமே தோற்றுவிக்கப்படும்.
(5) சுற்றயல் நரம்புத்தொகுதி சருமம் எனும் போர்வையினால் போர்க்கப்பட்டு காணப்படும்.

*(தொடரும்....)*



கிளிநொச்சிக்கு நேற்றையதினம் விஜயம்மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கிளிநொச்சி இரனைமடு விமான நிலையத்தினை திறந்து வைத்ததோடு கிளிநொச்சி, வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தார் அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி ஏ9 வீதியினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்ததோடு மக்கள் வங்கியின் கிளிநொச்சி அலுவலகத்தினையும் திறந்து வைத்து வங்கி நடவடிக்கையினையும் ஆரம்பித்து வைத்தார். (29)

## நல்லூர் பண்டாரி குளப்பகுதியில் இளைஞரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் அவரது சின்னம்மாவால் முறைபாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 6.30 மணியிலிருந்து அதே இடத்தைச்சேர்ந்த சுரேஸ் பவிதாஸ் (வயது 17) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்த தகவல்களை தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 12 வயதுடைய தனது மகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய தந்தை ஒருவருக்கு யாழ். நீதிமன்றத்தால் 14 நாட்கள் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவம் யாழ். நகர்ப்பகுதியிலே நடைபெற்றிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

## தட்டாதெரு "வாள் வெட்டு" இரு சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருச்சந்தியில் கடந்த வெள்ளிக்கிழமை இருசாராரிடையே ஏற்பட்ட மோதலில் இதுவரை வாளால் வெட்டிப்படு காயப்படுத்திய இரண்டு சந்தேக நபர்கள் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்தில் சந்தேக நபர்கள் வாள் வெட்டிற்கு இலககாகிய நபர்களுடன் வியாபார நடவடிக்கை ஒன்று சம்பந்தமாக தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருக்கையில் முரண்பட்டு அது பெரும் மோதலாக உருவெடுத்ததனை அடுத்து வீடு ஒன்று அடித்து நொருக்கப்பட்டதுடன் குறித்த இருவரும் வாள் வெட்டிற்கு இலக்காகிய தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தட்டாதெருச சந்தியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## யாழ்.வலய மட்டத்தில் புத்தாக்க கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படும் வலய மட்ட புத்தாக்க கண்காட்சிப்போட்டி 2013 எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பகுதியில் 11 பாடசாலையும், நல்லூர் பகுதியில் 11 பாடசாலையும், கோப்பாய் பகுதியில் 13 பாடசாலைகளும் புத்தாக்கங்களை சமர்ப்பித்துள்ளன.

மேற்படி 30.05.2013 ஒப்படைக்கப்பட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களுக்கான வலய மட்டப் போட்டியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## தடைதாண்டல் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காணிமற்றும் காணி அபிவிருத்தி அமைச்சில் காணி உப யோகத் திட்டமிடல் உதவி அலுவலர்கள் II இற்கான தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை 2013 செம்டரெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இரண்டு வினாத்தாள்களைக் கொண்ட பரீட்சையாகும். சிங்களம், தமிழ் மொழியில் மட்டும் பரீட்சை நடைபெறும்.

மாதிரி விண்ணப்பப்படிவம், பரீட்சை நடைமுறை, தகைமைகள் போன்ற விபரங்களை 2013 ஜுன் 14ஆம் திகதி அரச வர்த்தக மானியைப் பார்வையிடலாம். (105)

## இஸ்லாமிய சன்மார்க்க பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா அல்குர் ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை 2013 செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறும் விண்ணப்பங்கள் யாவும் 2013 ஜுலை 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் 24 மாவட்டங்களிலும் பரீட்சை நடைபெறும் வடமாகாணத்தில் வவுனியா (54), முல்லைத்தீவு (56), யாழ்ப்பாணம் (58), மன்னார் (55), கிளிநொச்சி (57) ஆகிய மாவட்டத்திலும் பரீட்சை நடைபெறும்.

விண்ணப்பப்பத்திரம் ஜுன் 28 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேலும் தகைமைகள், அனுமதி அட்டை பெறல், பரீட்சை கட்டணம் செலுத்துதல், பரீட்சைக்கான பாடங்களும் பாடத்திட்டமும் போன்ற விபரங்களை 2013 ஜுன் 14 ஆம் திகதி அரச வர்த்தக மானியைப் பார்வையிடலாம். (105)

## இருக்கை வசதி இல்லாத பேருந்து தரிப்பிடம்

(யாழ்ப்பாணம்)

தம்பாலை சந்தி சந்நிதி வீதியில் அமைந்துள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் இருக்கை வசதிகள் இல்லை என பயணத்தை மேற்கொள்வோரால் தெரிவிக்கப்பட்டுகின்றது.

குறித்த பேருந்துத்தரிப்பிடமானது பல ஆண்டுகளுக்கு முனனர் நிர்மாணிக்கப்பட்டது. எனினும் அங்கு இருக்கை வசதிகள் எவையும் இல்லாநிலையில் உள்ளது.

எனவே பேருந்துக்காக காத்து நிற்கும் பயணிகள் நீண்ட நேரம் கால் கடுக்க நின்றே பயணிக்கின்றனர். எனவே இருக்கை வசதிகளைச் செய்து உதவுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## ஆயர் தின விழாத் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

ஆயர் தின விழாத்திருப்பலி எதிர்வரும் ஜுலை மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தூய மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட திருநாள் ஆடிமாதம் 3ஆம் திகதியாகும்.

ஆயரின் பணிக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இறையாசீர் வேண்ட அழைக்கப்படுகின்றனர்.

மாணவர்கள் காலை 8.30 மணிக்கு யாழ். தூய மரியன்னை பேராலயத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும்,யாழ் மறைக்கல்வி நடுநிலையமும் வேண்டியுள்ளது. (105)

## பூநகரியில் சமுர்த்தி வங்கிகள்

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம் பகுதியிலும் பூநகரி நகர்ப்பகுதியிலும் இரண்டு சமுர்த்தி வங்கிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்குரிய கட்டடங்களை அமைப்பதற்காக 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (112)

## மாணிக்கவாசகர் சுவாமிகள் திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவ சமய அறிவைவிருத்தி செய்யும் பொருட்டு மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டிளை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும் தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப் போற்றி! ஓம் நமச்சிவாய! புயங்கனே மயங்குகின்றேன் ஆகிய இரு தேவாரங்களும் கிழ் பிரிவிற்கு கண்கள் இரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே? வான் ஆகி! மண் ஆகி! வளி ஆகி! ஆகிய இரு தேவாரங்களும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவுத் இம்மாதம் 22 ஆம் திகதியாகும். பரிசில்கள் யூலை 12 ஆம் திகதி மாணிக்கவாசகர் சுவாமி கள் குருபூசை அன்று வழங்கப்படும்.

திருமுறை மனனப்போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல 82 நாவலர் வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரமும், உதவிப்பரீட்சை செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

## மாடு பிடிக்கச்சென்றவர் காயம்

(முல்லைத்தீவு)

தேவிபுரம் பகுதியில் மாடு பிடிக்கச் சென்ற ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்குள்ளாகியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவருவதாவது,

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த கேசவராசா சுபாஸ்கரன் (வயது 38) என்ற குடும்பஸ்தரே காயமடைந்துள்ளார். நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தை தொடர்ந்து அவர் உடனடியாக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

நெஞ்சுக்கும் வயிற்றுப்பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் காயமடைந்த இவர் உடனடியாக அங்கிருத்து அவசர சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு நேற்று மதியம் 12 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டார்.

# சிரியாவில் புனிதப்போருக்கு தயாராகுமாறு அழைப்பு



சிரியாவில் ஆட்சி மாற்றத்தை உருவாக்கும் புனிதப் போருக்கு தயாராகுங்கள் என்று சன்னி மதத் தலைவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராடி வரும் சன்னி மதத் தலைவர்கள் எகிப்து அதிபர் முகம்மது மோர்சியை சந்தித்தனர்.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தருவதாக அவர்களிடம் எகிப்து அதிபர் வாக்குறுதி அளித்தார்.

இதனையடுத்து, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த சன்னி மத பெருந்தலைவர் யூசப் எல்-கொரடாவி, சிரியாவில் மக்களை ஒடுக்க நினைக்கும் பஷர் அல் ஆசாத்தின் அடக்குமுறை இஸ்லாத்திற்கு எதிராக தொடுக்கப்படும் போர் போன்றது. அவரது ஆட்சிக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராக நடைபெறும் இந்தப் புனிதப் போரில் இருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம். என்று கூறினார்.

உலகச் செய்திகள்



பிரான்ஸ் சென்றுள்ள கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர், பாரீசில் நடைபெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் அதிபர் பிரான்காய்ஸ் ஹாலண்டேவுடன் பங்கேற்றார்.

# விழி வெண் படலத்தில் புதிய அடுக்கு இந்திய விஞ்ஞானி கண்டுபிடிப்பு

மனித கண்களில் காணப்படும், விழிவெண் படலத்தில் (கார்னியா), புதிய அடுக்கு இருப்பதை, இந்திய விஞ்ஞானி கண்டுபிடித்துள்ளார். மனித உறுப்புகளில் மிக முக்கியமாகக் கருதப்படும் கண்ணின் செயற்பாடுகள் குறித்தும், செயற்கை முறையில் கண் உருவாக்கம் குறித்தும், பிரிட்டனில் உள்ள, நாட்டிங்காம் பல்கலைக் கழகத்தில், பல நாடுகளைச் சேர்ந்த ஆசவாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கண்ணில், கார்னியா எனப்படும் பாதுகாப்பான லென்ஸ் உள்ளது. இதன் வழியாகவே ஒளியானது, கண்ணில் ஊடுருவி செல்கிறது. இதுவரை, கார்னியாவில் ஐந்து அடுக்குகள் இருப்பதாக டாக்டர்கள் கூறி வரும் நிலையில், ஆறாவதாக புதிய அடுக்கு ஒன்றை, இந்திய விஞ்ஞானி, அரிமந்திர் துவா கண்டறிந்துள்ளார்.

இதுவரை, கார்னியல் எபிதேலியம், பொமைன்ஸ் லேயர், கார்னியல் ஸ்ட்ரோமா, டிசேமேட்ஸ் மெம்பரைன் மற்றும் கார்னியல் என்டோதெலியம் ஆகிய ஐந்து அடுக்குகள் இருப்பதாக கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில், மூன்றாவது மற்றும் நான்காம் அடுக்குகளுக்கு மத்தியில் ஒரு அடுக்கு இருப்பதை, துவா கண்டுபிடித்துள்ளார். இது, கார்னியாவின் மொத்த தடிமனான, 550 மைக்ரான்களில் (0.5 மி.மீ), வெறும், 15 மைக்ரான் தடிமன் கொண்டுள்ளதாக, துவா தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்டு பிடிப்பின் மூலம், கண் அறுவைச் சிகிச்சையில், இதுவரை ஏற்பட்ட தவறுகள் சரி செய்யப்படும் என்றும், மிகத் துல்லியமான சிகிச்சை மூலம், கண் மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொள்ளலாம் எனவும், டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இந்த புதிய அடுக்கிற்கு, துவாவின் பெயரே சூட்டப்பட்டுள்ளது.

# உலகின் சிறந்த விமானநிலையமாக இந்திராகாந்தி விமானநிலையம்



உலகிலுள்ள அனைத்து விமான நிலையங்களும் அவற்றின் பயணிகளுக்கு அளிக்கும் சேவைகளைப் பொறுத்து தரவரிசைப் படுத்தப்படுகின்றன. கடந்த 2006ஆம் ஆண்டில் தொடங்கப்பட சர்வதேச விமான நிலைய மன்றம், துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இயங்கி வருகின்றது. 275 விமான நிலையங்கள் இந்த அமைப்பின் கீழ் உள்ளன.

இவற்றில் சிறந்த விமான நிலையங்களுக்கு இந்த மன்றம் ஆண்டுதோறும் விருது வழங்கி பாராட்டுகின்றது. இந்த மன்றத்தின் மதிப்பீடு விமானநிலையப் பயன்பாட்டாளர்களின் திருப்திக்கான குறியீடாகக் கருதப் படுகின்றது.

அந்த வரிசையில், கடந்த 2012ஆம் ஆண்டில் மதிப்பீடு பெற்ற 199 விமான நிலையங்களில், சிறந்த விமானநிலையத் தரவரிசையில் இரண்டாவது இடத்தை டில்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் பெற்றுள்ளது.

25-40 மில்லியன் பயணிகளுக்கு அளிக்கப்படும் சேவைகள் பிரிவில் இந்தப் பாராட்டு கிடைத்துள்ளது. இதுதவிர, மற்ற அனைத்து பொதுப் பிரிவுகளிலும், நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. வியாழக் கிழமை அன்று இஸ்தான் புல்லில் நடைபெற்ற விழா ஒன்றில் இந்த விருது வழங்கப் பட்டது.

டில்லி விமானநிலையத் தின் இயக்குநருடன் மத்திய தொழில் பாதுகாப்பு அமைப்பு, விமானநிலைய கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் ஏர் இந்தியா ஆகியவற்றின் ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழு ஏசிஐ ஏஎஸ்கியூ விருதினைப் பெற்றது. இந்த விருது தங்களின் ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களின் தொடர்ந்த முயற்சிக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும். என்று விமானநிலையத்தின் நிர்வாக இயக்குநரான பிரப்பாகர் ராவ் கூறினார்.

டில்லி விமானநிலையத்தின் மொத்தப் பயனாளர்கள் ஆண்டிற்கு 60 மில்லியன் பயணிகள் ஆகும். சென்ற வருடம் 34.2 மில்லியன் மக்கள் இந்த விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

அதேபோல் 5,50,000 டன் எடை கொண்ட சரக்கு பொருட்கள் இந்த விமான நிலையத்தில் கையாளப்பட்டுள்ளன. 3,00,000இற்கும் மேற்பட்ட விமானங்கள் இங்கு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# பிரபல திரைப்பட நடிகர், இயக்குநர் மணிவண்ணன் மாரடைப்பால் மரணம்

## சோகத்தில் திரையுலகம்

பிரபல தமிழ் திரைப்பட இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் (வயது 59) மாரடைப்பால் சென்னையில் மரணம் அடைந்தார்.

சென்னை நெசப்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்தபோது, திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த மணிவண்ணன் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் உடல் நலம் தேறியிருந்த நிலையிலேயே நேற்று மரணமடைந்துள்ளார்.

சென்னை நெசப்பாக்கத்தில் உள்ள ஆர்.வி. ஆர். ஹவுஸ் குடியிருப்பு பகுதியில் மணிவண்ணன் குடும்பத்துடன் வசித்துவந்தார். நேற்று பகல் 12 மணிக்கு வீட்டில் இருந்தபோது, முதுகு வலிப்பதாக கூறியவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.. அடுத்த நிமிடம் மயங்கி கீழே சாய்ந்து உயிரிழந்தார்.

நூறாவது நாள், 24 மணி நேரம், கோபுரங்கள் சாய்வதில்லை, அமைதிப்படை என தமிழில் 50 படங்களை இயக்கியவர் மணிவண்ணன். 400இற்கும் அதிகமான படங்களில் நடித்தும் உள்ளார்.

அண்மையில்தான் மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ் நடித்த அமைதிப்படை-2 படம் வெளியாகி இருந்தது.

தி.மு.க தலைவர் கருணாநிதியின் கதை வசனத்தில், “பாலைவன ரோஜாக்கள்” என்ற படத்தையும் அவர் இயக்கி உள்ளார்.

பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவிடம் சேர்ந்து உதவி இயக்குநராக பணிபுரிந்த மணிவண்ணன், பின்னர் தனியாக திரைப்படங்களை இயக்கத் தொடங்கினார்.



பாரதிராஜா இயக்கத்தில் வெளியான நிழல்கள், டிக் டிக், அலைகள் ஓய்வதில்லை உள்ளிட்ட படங்களுக்கு திரைக்கதையும் எழுதி உள்ளார்.

கோவை மாவட்டம் சூலூர் பகுதியைச் சேர்ந்தவர் மணிவண்ணன். அந்த மண்ணுக்கே உரிய நக்கல், நையாண்டி மணிவண்ணனிடம் அதிகமாகக் காணப்படும்.

நடிகர் சத்யராஜுடம் மிகவும் நெருக்கமாக நட்பு பாராட்டி வந்தார். இருவரும் இணைந்த அமைதிப்படை, மணிவண்ணனின் திரையுலக வாழ்வில் மாபெரும் வெற்றிப்படமாக அமைந்தது

மணிவண்ணனின் மறைவுக்கு தமிழ் திரைப்பட இயக்குநர்கள் மற்றும் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட தமிழ் திரையுலகை சேர்ந்தவர்கள் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.


நெசப்பாக்கத்தில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.அவரது இறுதி சடங்கு நாளை நடக்கவிருக்கிறது.

# போர் விமானியாக பாகிஸ்தான் பெண் தேர்வு

பாகிஸ்தான் விமானப்படையில், முதன்முதலாக ஒரு பெண், போர் விமான பைலட்டாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானின், பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பகவல்பூரைச் சேர்ந்தவர் ஆயிஷா பாருக், 26. இவரும், மேலும், 5 பெண்களும், போர் விமான பைலட் இறுதித் தேர்வில் கலந்து கொண்டனர். இத்தேர்வில் ஆயிஷா, போர் விமாளிகளாக தேர்வானார்.

பாகிஸ்தான் விமானப் படையில், 19 பெண்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் ஆயிஷா போர்விமான பைலட்டாக பொறுப்பேற்றுள்ளார். தன், குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி, ஆயிஷா இந்த பொறுப்பை ஏற்றுள்ளார். நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை நன்கு அறிந்த ஆயிஷா, தன்னுடைய பணியில், பெரும் சவால்கள் இருந்தாலும், அதை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

## அம்பலவன் பொக்கணை வித்தியாலயத்திற்கு
# புதுவாழ்வு அமைப்பால் நூல்கள் அன்பளிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலய நூலகத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்களை முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் கையளித்துள்ளார்.

பாடசாலை முதல்வர் சி. ஏகாம்பரம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புனர்வாழ்வு, புதுவாழ்வு என்ற அமைப்பைச் சேர்ந்த சர்வேஸ்வரன் என்பவரால், இறுதிக் கட்டப்போரின் போது பாதிப்பு அடைந்த பாடசாலைக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை நூலகத்திற்கு வழங்கியுள்ளார் இதனை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் பாடசாலை மாணவர்களிடம் கையளித்துள்ளார்.

இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக வலையக் கல்விப் பணிப்பாளர் ராஜ்குமார், முன்பள்ளியின் உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி, நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிறிகந்தராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (40)

# ஜெயலலிதாவின் அழுத்தம்; இலங்கைக்கு அச்சுறுத்தல்
## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசுக்கு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா கொடுத்து வரும் அழுத்தங்கள் இலங்கையின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டப் படிப்புகளைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தாவது,

இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இதற்கு முக்கியக் காரணமே தமிழ்நாடு அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம் மிக முக்கியமான அம்சமாக இருப்பதுதான்.

குறிப்பாக, தேர்தல் காலத்தில் இலங்கை விவகாரம் அங்கு முக்கியமான இடத்தைப் பிடித்தது.

சமீபகாலமாக இலங்கை அரசாங்கத்தை அனைத்துலக தளத்தில் எதிர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இது இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

இலங்கையில் வாழும் சில தமிழர்கள் தமிழ்நாடு வழியாக, வெளிநாடுகளில் வாழும் தமிழர் ஆதரவு அமைப்புகள் மூலம் தனித்தமிழ் ஈழக் கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதனால் கடல் மார்க்கமாக இலங்கைக்கு ஆயுதங்கள் கடத்தப்படும் அச்சுறுத்தலும் உள்ளது.

விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்புகளுக்கு தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கும் ஆதரவு, கடல்வழியாக ஆயுதங்கள் கடத்துவதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

இது இலங்கை அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும்.

அதேவேளை, இந்திய எல்லையில் சீனாவின் அச்சுறுத்தல் இலங்கைக்கு மறைமுக ஆபத்தாக அமையும். மிகப் பெரும் பொருளாதார வல்லரசாக சீனா உருவாகி வருகிறது.

அதன் அச்சுறுத்தலை சமாளிக்க அமெரிக்காவின் தயவை இந்தியா நாட வேண்டியிருக்கும்.

அத்தகைய நிலையில் இந்தப் பிராந்தியத்தில் உள்ள இலங்கைக்கு அது பெரும் பாதிப்பாக அமையும்.

மாலைத்தீவில் தளம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சி இந்தப் பிராந்தியத்தில் அமைதியற்ற சூழலை உருவாக்கி விடும் என்றும் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## படை அதிகாரிகள்...

பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், வெலிங்டனில் தற்போது பயிற்சி பெற்று வரும் அதிகாரிகளான, விங் கொமாண்டர் பண்டார தசநா யக்க, மேஜர் ஹரிச்சந்திர ஹெட்டியாராச்சிகே ஆகியோர், புனேயில் உள்ள இரா ணுவ தொழில்நுட்ப நிறுவகத்தில், தொழில்நுட்ப அதிகாரிகள் கற்கை நெறிக்காக மாற்றப்படக் கூடும் என்று இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா ஏற்கனவே அறிவித்து விட்டதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஆனால் இந்தியாவின் அந்தத் திட்டத்தை இலங்கை நிராகரித்து விட்டது.

இதையடுத்து இரண்டு அதிகாரிகளையும், செக்கந்தி ராபாத்தில் உள்ள பாதுகாப்பு முகாமைத்துவக் கல்லூரியில், உயர்பாதுகாப்பு முகாமைத்துவ கற்கைநெறிக்காக, அனுமதிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

இதற்கிடையே, இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெலிங்டனில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் கல்லூரியை நாளைய தினம் முற்றுகையிடுவதற்கு 19 அரசியல்கட்சிகளும், அமைப்புகளும் திட்டமிட்டுள்ளன.

பெரியார் படிப்பகத்தில் நடத்தப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க. விடுதலைச் சிறுத்தைகள், வணிகர் கழகம் உள்ளிட்ட 19 கட்சிகளும் அமைப்புகளும் பங்கேற்றன.

## இனவாத...

சபைத் தேர்தல் நடைபெறும். வடபகுதி மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் சுதந்திரம் உண்டு. நீங்கள் தெரிவுசெய்யும் அவர்கள் இப் பிராந்தியத்தை மேலும் அபிவிருத்தி செய்வார்கள். உங்கள் பிராந்தியம் துரிதமாக அபி விருத்தியடைகிறது. அது மேலும் அபிவிருத்தியடைய வேண்டும்.

இனவாத அரசியல் அபாயகரமானது. இந்த நாட்டுக்கு குறுகிய அரசியல் போக்கு தேவையில்லை. தவறான பிரசாரங்களை நம்ப வேண்டாம். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் அழிந்துவிடாத வகையில் நீங்கள் தீர்மானம் எடுப்பீர்கள் என நான் நம்புகிறேன் என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி.

கடந்த நான்கு ஆண்டுகளில் இப்பிராந்தியம் வீடமைப்பு, பாதை அபிவிருத்தி, மின்சக்தி, கல்வி, சுகாதாரம், வர்த்தகம், வங்கியலுவல்கள் உள்ளிட்ட பல் துறைகளில் புதிய வசதியை பெற்றுள்ளது. மேலும் பல வசதிகளை இப்பகுதிகளுக்கு தொடர்ச்சியாக பெற்றுக் கொடுப்போம் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் உறுதியளித்தார்.

## அபிவிருத்தி...

மக்கள் வங்கி காரியாலயத்திற்கு முன்பாகத் திறந்து வைத்ததுடன், வீதி அபிவிருத்திப் பணி நிறைவு தொடர்பாக அமைக்கப்பட்ட பெயர்ச்சின் னத்தையும் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல, நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடமா காண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலி, அரச அதிபர்கள், யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், இராணுவப் படையதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஏ-9 வீதி அபிவிருத்திப் பணியானது கல்குளமவிலிருந்து யாழ்பாணம் வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 153 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதி அபிவிருத்திப் பணிக்காக சீன அரசாங்கம் 19.125 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப் பட்ட இந்த புனரமைப்புப் பணி கள் கடந்த மே மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

153 கிலோ மீற்றர் கொண்ட இந்த வீதிப் புனரமைப்பின் போது 35 பாலங்களும் 273 மதகுகளும் புனரமைக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (29, 142)

## புலிகளின்...

டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப் பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அமைச்சர் இதன்போது விளக்கமளித்துள்ளார்.

உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சமூக நிறுவனங்கள் என்ற போர்வையில் சில விடுதலைப்புலி ஆதரவு அமைப்புகள் இயங்கி வருவதாக ஜேர்மனிய அமைச்சர் குய்டோ தெரிவித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலிகளுக்கு ஆதரவான வகையில் பாடசாலைகளும், பிரசாரப் பணிகளை மேற்கொண்டு வருவதாக இலங்கையிலிருந்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளதாக அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் தீர்வை...

ளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் சட்டம் இயற்ற முடியும் என்ற உறுப்புரையை 13ஆவது திருத்தத்திலிருந்து நீக்கி விடுவது பற்றியும் இந்த குழுவில் ஆராய அரசாங்கம் திட்ட மிட்டு வருகின்றது.

இதேவேளை, அரசாங்கம், முன்னர் அடையப்பட்ட பொதுக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டாலொழிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அறிவித்துள்ளன.

# துர்க்காதேவி மணிமண்டபத்தில் ‘சதங்கை நாதம்’ ஆற்றுகை

யாழ். நல்லைக் கலாமந்திர் நடனாலய மாணவர்கள் வழங்கும் சதங்கை நாதம் என்னும் நடன ஆற்றுகை நிகழ்ச்சி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராக ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய ஓய்வுபெற்ற நடன ஆசிரிய ஆலோசகர் கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நல்லைக் கலாமந்திர் இயக்குநர் அனுஷாந்தி சுகிர்தராஜ் நட்டுவாங்கத்தை மேற்கொள்வார். அணிசெய் கலைஞர்களாகப் பாட்டு தவநாதன் றொபேட், சுகன்யா அரவிந்தன், மிருதங்கம் சின்னையா துரைராஜா, வயலின் அம்பலவாணர் ஜெயராமன், ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (10)

## பேராசிரியர்....

தேர்ச்சிபெற்ற பேராசிரியராக விளங்கினார்.

யாழ்ப்பாணம் புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் 1959ஆம் ஆண்டில் உதவி விரிவுரையாளராகவே பேராதனை பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார்.

பின்னர் 1978 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடமையாற்றியதுடன், 1987 ஆம் ஆண்டு முதல் அந்த பல்கலைக்கழகத்தில் கலைப் பீடாதிபதியாகவும் பதவி வகித்தார்.

வவுனியா வளாகத்தின் தலைவராகவும் சிலகாலம் சேவையாற்றியுள்ள அவர் 2002 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார்.

2003ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தினால் உயர் கலாநிதிப் பட்டம் வழங்கி பேராசிரியர் பாலகிருஷ்ணன் கௌரவிக்கப்பட்டார்.

மறைந்த பேராசிரியரின் பூதவுடல் பொரளையிலுள்ள மலர்ச்சாலை ஒன்றில் வைக் கப்பட்டுள்ளதுடன், இன்று காலை முதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படவுள்ளதாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

## வரலாற்றில்...

வீதியில் நேற்று மாலை 4.00 மணிக்கு இடம்பெற்றது. இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதான ஆழியை இயங்கச் செய்து மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், வடக்கின் வசந்தம் திட்ட இணைப்பாளர் குணசீலன், யாழ்.மின் அத்தியட்சகர் ஞானேஸ்வரன், மின் அதிகாரி இராஜேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், 52 ஆவது பிரிவு கட்டளை அதிகாரிகள், மருதங்கேணி பொறுப்பதிகாரி, மூன்று கிராமங்களையும் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, முதன் முறையாக தமக்கு மின்சாரம் வழங்கப்பட்டமையிட்டு இவ்வூர் மக்கள் பெரிதும் மகிழ்வடைந்துள்ளனர். (38)

# கொழும்பில் உள்ள தமிழ்க் கைதிகளை வடக்கு, கிழக்கிற்கு மாற்றக் கோரிக்கை

கொழும்புச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்த தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பாலானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்ற நிலையில், அவர்களைப் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் கொழும்பு வர பல சிரமங்களை எதிர்கொள்வதுடன், சிறைச்சாலை அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கும் அவர்களது குடும்பத்தினர் ஆளாவதாக அந்த அமைப்பின் தலைவரான சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தக் கைதிகளின் குடும்பத்தினர் பெரும் பொருளாதாரச் சிக்கல்களையும் எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ள அவர், ஆகவே அந்த கைதிகளை அவர்களது குடும்பத்தினர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்ற வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக தாம் பல தடவைகள் நீதிமன்றங்களைக் கேட்டிருக்கின்ற போதிலும், அவை தம்மை இது தொடர்பில் சிறைச்சாலை நிர்வாகங்களிடம் பேசுமாறு கூறியிருப்பதாகக் கூறியுள்ள நாமல் ராஜபக்ஷ, ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் இந்தக் கோரிக்கைக்கு இதுவரை செவிசாய்க்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆகவே இது தொடர்பாக அரசாங்கம் ஒரு கொள்கை முடிவை எடுத்து அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கோப்பிலவு, சூரியபுரத்திற்கு ஜனாதிபதியால் மின் விநியோகம்

(நெடுங்கேணி)

முல்லைத்தீவிற்கு நேற்றைய தினம் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீள்குடியேறியுள்ள கோப்பிலவு சூரியபுரம் மக்களுக்கான மின்விநியோகத்தை ஜனாதிபதி ஆரம்பித்துவைத்தார்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள கண்ணகியம்மன் முன்பள்ளியையும் திறந்துவைத்த ஜனாதிபதி முன்பள்ளிச்சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கிவைத்தார். இதேவேளை சூரியபுரத்தில் குடியேறிய மக்களுக்கு 10 நிரந்தர வீடுகளும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கும் பரிசுப்பொருட்களை வழங்கி வைத்தார். (40)

## இரணைமடு விமான ஓடுதளம்; திறந்துவைத்தார் ஜனாதிபதி



இரணைமடு விமான ஓடுதளத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்தார்.

விடுதலைப்புலிகள் தமது இலகு ரக விமானங்களை பறகக விடுவதற்காக இந்த ஓடுதளத்தை முன்னர் பயன்படுத்தி வந்ததுடன், போர் நடைபெற்ற போது, விடுதலைப்புலிகள் அதனை முற்றாக அழித்திருந்தனர்.

இதனையடுத்து 2012 ஆம் ஆண்டு இந்த ஓடுதளம் விமானப்படையினரால் புதுப்பிக்கப்பட்டது.

சர்வதேச தரத்திற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த விமான ஓடுதளத்தின் நீளம் 1500 மீற்றர்களாகும். அகலம் 25 மீற்றர்களாகும்:

இந்த விமான ஓடுதளத்துடன் வடக்கில் உள்ள விமான ஓடுதளங்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே வவுனியா, மன்னார், பலாலி ஆகிய பிரதேசங்களில் விமான ஓடுதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## காதலர்களைத் தண்டிப்பதற்கு பொலிஸாருக்கு உரிமையில்லை

### என்கிறார் அமைச்சர் டலஸ்

காதலர்களை தண்டிக்க காவல்துறையினருக்கு உரிமை கிடையாது என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

கைகளைக் கோர்த்துக் கொண்டு ஒரு குடையில் இருக்கும் காதல் ஜோடிகளை தண்டிக்க பொலிஸாருக்கு அதிகாரம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை ஓர் பிழையாக தாம் கருதவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


அண்மையில் மாத்தறையில் 80 இளம் காதல் ஜோடிகள் கைது செய்யப்பட்டதாக தகவல் கிடைத்தது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு குடையின் கீழ் அமர்ந்து கதைத்துக் கொண்டிருப்பது, கைகளைக் கோர்த்துக் கொள்வதில் எவ்வித தவறும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தங்களது கன்னங்களில் முத்தம் கொடுத்துக் கொள்ளவில்லை, ஆடையின்றி அநாகரீகமாக நடந்து கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாடசாலைகளுக்கு எதிரில் கதைத்துக் கொண்டிருந்தால் அந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடுவதில் தவறில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் 400 ரூபாவிற்கு அறையொன்றை பெற்றுக் கொள்ள முடியும் எனவும், அவ்வாறு பணத்தை செலவிட முடியாத காரணத்தினால் இவர்கள் வெளியிடங்களில் சந்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் பிள்ளைகள் காவல்துறையினரின் பிள்ளைகளுக்கு இவ்வாறான பிரச்சினைகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல்வாதிகளின் பிள்ளைகள், பாதாள உலகக் கோஷ்டியினர், சிரேஸ்ட காவல்துறை உத்தியோகத்தர்கள் முழு இரவையும் இரவு நேரக் களியாட்ட விடுதிகளில் நேரத்தைக் கழிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுடனான போட்டியில் 8 விக்கெட்டுக்களால் இந்தியா வெற்றி



(பேர்மிங்ஹாம்)

ஐ.சி.சி.சம்பியன் கிண்ணத்தொடரில் நேற்று நடந்த இந்தியா - பாகிஸ்தான் அணிகளுகிடையிலான பி.பிரிவு ஆட்டத்தில் மழை குறுக்கிட்டதன் காரணமாக டக்வேத் லூவிஸ் முறைப்படி இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பை தீர்மானிக்க பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது. பாகிஸ்தான் அணி 12 ஆவது ஓவரில் 1 விக்கெட்டை இழந்து 50 ஓட்டங்களை எடுத்த வேளை மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டு 16 நிமிடங்களின் பின் ஆட்டம் ஆரம்பமானது. எனினும் 19 ஆவது ஓவரில் மீண்டும் மழை குறுக்கிடவே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதன்போது பாகிஸ்தான் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 2 மணி நேரத்திற்குப் பின்னர் ஆட்டம் ஆரம்பித்த வேளை ஓவர்கள் 40 ஆக குறைக்கப்பட்டது.

ஆட்டம் ஆரம்பித்த பின்னர் அஷ்வின், ஜடேஜா இருவரும் சுழலில் கலக்க பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்ந்தன. இறுதியில் 39.4 ஓவரில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக கம்ரன் அக்மல் 21, மொகமட் ஹபீஸ் 27, ஆசாத் ஷாபிக் 41, மிஸ்பா உல்ஹக் 22 உமர் அன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் புவனேஸ்வரகுமார், இஷாந் சர்மா, அஸ்வின், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 11.3 ஓவரில் 1 விக்கெட்டை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மீளவும் மழை குறுக்கிட்டது. பின்னர் ஆட்டம் ஆரம்பித்த வேளை 22 ஓவர்களில் 102 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என தீர்மானிக்கப்பட்டது. எனினும் இந்திய அணி 19.1 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. ரோகித் சர்மா 18, தவான் 48, ஆட்டமிழக்காமல் ஹோலி 22, டினேஸ் கார்த்திக் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சஜீட் அஜ்மல், வகாப்ரியாஸ் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக புவனேஸ்வரகுமார் தெரிவானார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதானவர் விடுதலை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபரை யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

அறிவுநகர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆயுதப் பயிற்சி வழங்கியமை தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்க மறுத்த குற்றச்சாட் டில் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

மேற்படி வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற பின்னர், 10ஆம் திகதி டிசம்பர் மாதம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு தொடர் விசாரணை இடம்பெற்றது.

மேற்படி வழக்கினை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் மேற்படி நபரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (25)

## மருத்துவர்களின் வாகனங்களுக்கு புதிய இலச்சினை அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் மட்டுமல்லாது தனியார் வைத்தியசாலைகளிலும் கடமைபுரியும் சகல மருத்துவர்களுக்கும் அவர்களது வாகனங்களுக்கான புதிய உத்தியோகபூர்வ இலச்சினையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க வைத்தியர்கள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து அவர்களது வாகனங்களுக்கான புதிய உத்தியோகபூர்வ இலச்சினை வழங்கும் நிகழ்வு நேற்று சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

முன்னர் வழங்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ இலச்சினையை சிலர் ரிப்பர் வாகனங்கள், முச்சக்கர வண்டி, வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள், வான்கள் போன்றவற்றில் முறைகேடாக உபயோகித்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே அரசாங்க வைத்தியர்கள் சங்கம், இந்த வேண்டுகோளை அமைச்சரிடம் முன் வைத்தது.

முறைகேடாக இலச்சினை பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் தம்மிடம் இருப்பதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

சொத்துக்கள் ஆதனங்கள் சட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ புதிய இலச்சினை அரச வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தப்படும். இதேவேளை, முன்பிருந்த உத்தியோக பூர்வ இலச்சினை முறைகேடாக உபயோகிக்கப்பட்டமை தொடர்பாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரின் ஊடாக சுகாதார அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.